பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

உங்கள் நிறுவனங்களுக்கு திறமையான பணியாளர்களை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள
WINSTAR JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstar jaffna.com
Fb : winstar job bank
021 320 2789
c/400

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | புரட்டாதி 09, திங்கட்கிழமை 25.09.2017 | கதிர் 323

- ★ சிங்கள மேலாதிக்கம் மாறவில்லை
- ★ மூலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லை
- ★ இணைப்பு, சமஷ்டி, சுயநிர்ணய உரிமை நிராகரிப்பு
- ★ தெளிவான அதிகாரப் பகிர்வு இல்லை
- ★ தமிழரின் பயணத்தை பின்நோக்கி நகர்த்தும் நடவடிக்கை
- ★ கூட்டமைப்பின் இணைப்பு அறிக்கை அர்த்தமற்றது

# இடைக்கால அறிக்கை தமிழர்கள் ஏமாற்றம், அதிருப்தி!

## கேப்பாபிலவில் 111 ஏக்கர் காணி விரைவில் விடுவிக்கப்படுமாம்


யாழ்ப்பாணம்,செப்.25

முல்லைத்தீவு கேப்பாபிலவில் படையினர் வசமுள்ள மிகுதிக் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு ராணுவ முகாம்களில் இருந்து படையினர் வெளியேறி வருகின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு இராணுவ

பக்கம் 18 »



## தொடர்ந்து போராடும் நிர்ப்பந்தம் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் காட்டம்

கொழும்பு, செப்ரெம்பர் 25

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக முன்வைக்கப்பட்ட இடைக்கால அறிக்கை தமிழர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் அளித்திருப்பதாகக் கூறி அந்த அறிக்கையை நிராகரித்திருக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், அந்த அறிக்கை தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பான பயணத்தைப் பின்னோக்கி நகர்த்தி, தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 18 »

## அதிகாரப் பகிர்வுக்கு சு.க., ஐ.தே.க. இரண்டுமே ஆதரவு அளிப்பதே தீர்வுக்கான முதல் வெற்றி!

### வடக்கில் வைத்து அமைச்சர் ராஜித நம்பிக்கை தெரிவிப்பு



(நிதர்ஷன்)

நாட்டில் கொண்டுவரப் படவுள்ள புதிய அரசமைப்பு விடயத்தில் நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் அதிகாரப் பகிர்வுக்கு முழுமையாக ஆதரவு தந்திருக்கின்றமையே எமக்கு கிடைத்த முதல் வெற்றி என சுகாதார, போஷாக்குத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு நேற்று வருகை தந்த

பக்கம் 18 »

## ரணிலுடன் சேர்ந்து ஆட்சியமைக்கலாமாம்; ஆனால் மஹிந்தவுடன் சேரவே கூடாதாம்!

### இப்படிக் கூறுகின்றார் சந்திரிகா அம்மையார்

கொழும்பு,செப்.25

நாட்டை மீட்டெடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஆட்சியமைப்பதில் தவறில்லை. ஆனால் மஹிந்த ராஜபக்ஷவுடன்தான் இணைந்து ஒருபோதும் ஆட்சியமைக்கக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

இன்று நாம் நாட்டை

பக்கம் 18 »



## இந்த அரசினால் நாடும் அழியும் பௌத்த சாசனமும் அழிவுறும்!

### முருத்தொட்டுவாவே தேரர் எச்சரிக்கை

கொழும்பு,செப்.25

இந்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கவனியாது விட்டால், நாடும், பௌத்த சாசனமும் அழிந்து போய் விடும் எனத் தாயகத்தைக் காக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் வண. முருத்தொட்டுவாவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

மக்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு அரசாங்கம் தனக்குத் தேவையானதைச் செய்து வருவதாகவும் தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

பக்கம் 18 »

## கிழக்கு மாகாண சபை கடைசி அமர்வு இன்று!

### அதன் பதவிக் காலம் 30 ஆம் திகதி முடிவு

கொழும்பு, செப்.25

கிழக்கு மாகாண சபையின் கடைசி அமர்வு இன்று இடம்பெறவுள்ளது.

2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் திகதி கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றது. இதையடுத்து, மாகாண சபையின் பணிகள் செப்ரெம்பர் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிலையில், அதன் ஐந்தாண்டு காலப் பகுதி எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. ஐந்தாண்டு காலப் பகுதியில் கிழக்கு மாகாண

பக்கம் 18 »

## தேர்தல், இடைக்கால அறிக்கை தமிழரசு மத்திய குழு ஆராய்வு

கல்முனை, செப்.25

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று அம்பாறை மாவட்டம் கல்முனையில் ஜெயா திருமண மண்டபத்தில் முற்பகல் 11 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை, உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் உட்பட பல விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன எனத் தெரியவருகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை

பக்கம் 18 »

## தம்பி திலீபன் ஈழத்தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதை உலகறியச் செய்ய தம்மையே ஆகுதியாக்கியவர்

### தியாக தீபத்துக்கு மலரஞ்சலி செலுத்தி, சுடரேற்றி சம்பந்தன் உரை



கல்முனை, செப். 25

"இலங்கையில் தமிழர்களுக்குத் தொடர்ந்து அநீதி இழைக்கப்படுகின்றமையை உலகறியச் செய்வதற்காகத் தமது உயிரையே ஆகுதியாக்கிய தம்பி திலீபனின் போராட்டம் வித்தியாசமானது. இந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அறநெறியில் போராடி, தனது கொள்கைக்காகக் காந்தீய வழியில் தன்னுயிரை ஈகம் செய்தவர் அவர்.

"அவரது முப்பதாவது வருட நினைவை நாம் இன்று இங்கு அவருக்கு அஞ்சலி செலுத்தி அனுஷ்டிப்பது பொருத்தமானது."

– இவ்வாறு கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

அம்பாறை மாவட்டம், கல்முனை ஜெயா திருமண மண்டபத்தில் நேற்று

பக்கம் 18 »



# கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி ரயிலில் பயணித்த பயணிகள் வவுனியாவில் போராட்டம்!





வவுனியா, செப். 25

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி கடுகதி ரயிலில் பயணித்த பயணிகள் வவுனியாவிற்கு அப்பால் ரயில் செல்லாததால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வந்தவை வருமாறு:-

நேற்றுமுன்தினம் காலை 5.40 மணிக்கு கொழும்பில் இருந்து யாழ் .நோக்கிச் செல்லும் கடுகதி ரயிலில் 1500 ரூபா பற்றுச்சீட்டு பெற்று பயணிகள் தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

எனினும், பொல்காவெல ரயில் நிலையத்திற்கு அப்பால் ரயில் தடம் புரண்டதாகத் தெரிவித்து அங்கு இரண்டு மணிநேரம் காத்திருந்த பயணிகளைப் பேருந்தில் ஏற்றி பொத்துஹெர ரயில் நிலையத்துக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

பின்னர் அங்கிருந்து ரயில் இல்லாமையால், ரயில் நிலைய அதிகாரிகளுடன் முரண்பட்டமையையடுத்து ரயில் ஒன்றில் மாகோவரை பயணிகள் அனுப்பப்பட்டுள்ளனர்.

எனினும், மாகோவில் இருந்து ரயில் வழங்கப்படாமையால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலை மறித்து பயணிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில், மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலில் வழி மறிக்கப்பட்ட ரயிலில் இருந்த பயணிகளை ஏற்றி கொழும்புக்கு அனுப்பிய ரயில் நிலைய அதிகாரிகள், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலில் மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி போராட்டத்தில் ஈடுபட்ட பயணிகளை அனுப்பியுள்ளனர்.

இந்தநிலையில், வவுனியாவை சுமார் 5.30 மணியளவில் வந்தடைந்த ரயிலை வவுனியாவிற்கு அப்பால் அனுப்ப முடியாது என வவுனியா ரயில் நிலைய அதிபர் தெரிவித்தமையையடுத்து பயணிகள் மீண்டும் வவுனியா ரயில் நிலையத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து வவுனியா பொலிஸார், சம்பவ இடத்துக்கு வருகைதந்து பயணிகளுடன் சமரசம் செய்தமையுடன் பேருந்து வசதியொன்றையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

எனினும், பயணிகள் அதில் பயணிக்காது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிறிதொரு ரயிலில் தமது பயணத்தை இரவு 6.45 மணியளவில் மேற்கொண்டனர்.காலை 5.40 மணிக்குக் கடுகதி ரயிலில் பயணிப்பதற்காக ஆரம்பித்த பயணம் சாதாரண ரயிலில் சென்று முடிந்தமையையிட்டு பயணிகள்

## கடந்த 17 வருடங்களாக வீட்டுத் திட்டம் இன்றி வாழும் மறவன்குளம் கிராம மக்கள்!



வவுனியா, செப். 25

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஈச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மீள்குடியேற்றக் கிராமமான மறவன்குளம் மக்கள் வீட்டுத் திட்ட வசதி இன்றிப் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியாவில் அமைக்கப்பட்ட வேப்பங்குளம், சிதம்பரபுரம், பூந்தோட்டம் ஆகிய முகாம்களில் வாழ்ந்த மக்களில் ஒரு தொகுதியினருக்குக் காணி வழங்கி 2001 ஆம் ஆண்டு மறவன்குளம் கிராமத்தில் குடியேற்றப்பட்டனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது அமைக்கப்பட்ட ஒரு வருடத்திற்கான தற்காலிக வீடுகளுக்குள்ளேயே கடந்த 17 வருடங்களாக இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்கள், உபகுடும்பங்கள் எனத் தற்போது 538 குடும்பங்கள் மறவன்குளம் கிராமத்தில் வாழ்ந்து வரும் நிலையில் 300 வரையிலான குடும்பங்கள் வீட்டு வசதியற்றவர்களாகவே வாழ்கின்றனர்.

தற்காலிக வீடுகள், மண் கொட்டகைகள், குடிசை வீடுகள், ஒரு வருடத்திற்கென வழங்கப்பட்ட இடிந்து விழும் நிலையிலுள்ள வீடுகளிலேயே இந்த மக்கள் தமது வாழ்க்கையைக் கழிக்கின்றனர். மாரி காலம் தொடங்கிவிட்டால் வீட்டுக்குள் மழை நீர் வந்து விடும் எனக் கூறும் இந்த மக்கள் தமக்கு நிம்மதியாக வாழ வீட்டுத் திட்டத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாம் எந்த வீட்டையும் எதிர்க்கவில்லை. எப்படியான வீடு என்றாலும் பரவாயில்லை மழைக்கும், வெயிலுக்கும் ஒதுங்கிக் கொள்ள இடம் இருந்தால் போதும் என மறவன்குளம் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-100)

## சர்வதேச சமாதான தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு!








வவுனியா, செப். 25

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு சமாதானத்திற்கான சர்வதேச இளைஞர் கூட்டமைப்பால் தேசிய இளைஞர் சமாதான செயலமர்வு நாடளாவிய ரீதியில் 20 மாவட்டங்களில் சர்வதேச சமாதான தினமான செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி பாடசாலைமாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், உயர்கல்வி நிறுவன மாணவர்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்டது.

'இளைஞர் சமாதானத்தைக் கட்டியெழுப்பல்' என்ற கருப்பொருளில் நடைபெற்ற தேசிய இளைஞர் சமாதான செயலமர்வு, வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயம், திருஞானசம்பந்தர் வித்தியாலயம், பூந்தோட்டம் மகா வித்தியாலயம், இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை, கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகிய 05 பாடசாலைகளைச் சேர்ந்த 391 மாணவர்களுக்கு நடத்தப்பட்டது.

சர்வதேச சமாதான தினத்தைக் கொண்டாடுவதுடன் மட்டுமன்றி, பல்வேறுபட்ட சமூக பின்னணியைக் கொண்ட இளைஞர்களுக்கிடையே சமாதானம் தொடர்பான அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடியதொரு சிறந்த தளத்தை உருவாக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட தேசிய இளைஞர் சமாதானச் செயலமர்வு வவுனியா மாவட்டத்தில் ஜனாதிபதி சாரணர்மன்றம், வவுனியா மாவட்ட அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், ரோட்டறிக் கழகம், தமிழ்த் தேசிய இளைஞர்கழகம் ஆகிய இளைஞர் அமைப்புக்களின் ஆதரவுடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(க-100)

# எவரையுமே புறக்கணிக்க மாட்டோம் எல்லோருடனுமே பேச்சு நடத்துவோம்!

## தமிழரசு மத்திய குழுக் கூட்டத்தின் பின் சம்பந்தன் கருத்து

"எவரையும் நாங்கள் புறக்கணிக்கவில்லை; எவரையும் நாங்கள் உதாசீனம் செய்யவில்லை; எவருடனும் நாங்கள் பேசத்தயார். எல்லோரிடமும் நாங்கள் பேசி, தமிழ் – முஸ்லிம் சமூகங்களுக்கு நன்மை பயக்கக் கூடிய விடயங்களில் ஒருமித்து நாங்கள் முடிவு எடுக்க விரும்பு கிறோம்." – என எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கல்முனை ஜெயா திருமண மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

இக்கூட்டத்தின் நிறைவின் பின்னர் மாலை 6 மணியளவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று காலையிலிருந்து மாலை வரை நடைபெற்றது. அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை சம்பந்தமாக எமது உறுப்பினர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள். அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டு, கூடிய விளக்கங்கள் வழங்கப்பட்டன. இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் தொடர்ந்து பேசுவதற்கு முடிவை எடுத்திருக்கின்றோம்.

பின்னரும் எமது கட்சியின் மத்தியசெயற்குழு இன்னுமொரு முறைகூடி இவ்விடயங்கள் தொடர்பில் பேசி சில தீர்மானங்களை எடுக்கும்.

இவற்றுக்கிடையில் கட்சியின் முக்கியஸ்தர்கள், சிவில் சமூகம் போன்றோரிடமும் பேசி இந்த அரசியல் சாசனம் சம்பந்தமாக உரிய தீர்வுகளைக் கண்டு, கருமங்களை நியாயமான முறையில் முன்னெடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் அத்தனையையும் நாங்கள் மேற்கொள்வோம்.

வரவிருக்கின்ற உள்ளூராட்சி மன்றத்தேர்தல், மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலும் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானங்கள், அவற்றினுடைய விளைவுகள், தாக்கங்கள், தேர்தல் நிர்ணய சபையினுடைய கடமைகள் ஆகியன தொடர்பிலும் பேசினோம்.

எவ்விதமாக மாகாண சபைத் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும், அவற்றை எவ்வாறு நாங்கள் அணுக வேண்டும் என்பன தொடர்பிலும் நாம் கலந்துரையாடினோம்.

இவ்விடயங்கள் தொடர்பிலும் எமது பேச்சுக்கள் தொடரும். மீண்டுமொரு முறை எமது மத்திய செயற்குழு கூடி முடிவு எடுக்க வேண்டிய தேவை உள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் எது உறுப்பினர்கள் கலந்துரையாடினார்கள். – என்றார்.

"எதிர்வருகின்ற மாகாணசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவது என்பது தொடர்பில் ஏதும் முடிவு எடுக்கப்பட்டதா?" – என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு –

"அவ்விதமான முடிவுகள் எவையும் எடுக்கப்படவில்லை. பரிசீலனைகள் நடக்கும். மக்களிடம் பேசுவோம். எமது கட்சி அங்கத்தவர்களிடமும், ஏனைய பேச வேண்டிய அனைவரிடமும் பேசுவோம்.

"தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இந்த விடயம் சம்பந்தமாகப் பேசும். இறுதியில் மக்களுடைய நன்மை கருதி எடுக்க வேண்டிய தீர்மானங்களை எடுப்போம். – என்றார்.

"தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் மட்டும்தான் பேச்சுகளை நடத்துகின்றது எனப் புதிதாக உதயமாகியிருக்கின்ற தூய முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஓர் அமைப்பு தெரிவிக்கின்றதே." – என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

"அது ஒரு தப்பான அபிப்பிராயம். அஷ்ரப்பின் காலம் தொடக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தமிழ்தேசியக்கூட்டமைப்பும் அஷ்ரப் தலைமை தாங்கிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் பேச்சுக்களை நடத்தின. அதுநீண்டகாலமாகநடைபெற்று வந்த விடயம். என்றாலும், அஷ்ரப் அவர்கள் இறந்த பின்னர் நாங்கள் முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தி வந்திருக்கின்றோம்.

"எவரையும் நாங்கள் புறக்கணிக்கவில்லை, எவரையும் நாங்கள் உதாசீனம் செய்யவில்லை, எவருடனும் நாங்கள் பேசத்தயார். எல்லோரிடமும் நாங்கள் பேசி தமிழ் – முஸ்லிம் சமூகங்களுக்கு நன்மை பயக்கக் கூடிய விடயங்களில் ஒருமித்து நாங்கள் முடிவு எடுக்க விரும்புகிறோம்." – என்றார் சம்பந்தன். (உ)

# 'கோடுகளால் பேசியவன்' நூல் அஸ்வின் நினைவாக வெளியீடு

ஊடகவியலாளர் பற்றிக் அல்பேட் அஸ்வின் சுதர்சனின் ஓராண்டு நினைவு நிகழ்வும் அவரது நினைவுகளைத் தாங்கிய 'கோடுகளால் பேசியவன்' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு யாழ். நாச்சிமார்கோவிலடியில் அமைந்துள்ள ஹம்சியா மகால் மண்டபத்தில் நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'நினைவுகளில் என்றும் பசுமையாக நிறைந்திருப்பவன் அஸ்வின்' என்ற பொருளில் அருட்பணி பிலிப் நஞ்சனகுமார் அடிகளும், 'ஊடகவியலாளர் அஸ்வின் சுதர்சனின் பன்முக ஆளுமைகள்' என்ற பொருளில் சமூக சேவைகள் உத்தியோகத்தரும் எழுத்தாளருமாகிய வே.தபேந்திரனும், 'மாதகல் மண்ணின் மைந்தனாக அஸ்வின் சுதர்சன்' என்ற பொருளில் புனித ஹென்றியரசர் கல்லூரி ஆசிரியர் ஜே.அன்ரனி தாசும், 'ஓவியராக, காட்டூனிஸ்ராக அஸ்வின் சுதர்சன்' என்ற பொருளில் பத்திரிகை உதவியாசிரியர் ஆ.சபேஸ்வரனும், 'நண்பர்கள் பார்வையில் அஸ்வின் என்ற பொருளில்' ரயில் நிலைய உத்தியோகத்தர் வி.கவிச்செல்வனும் 'செய்தி ஆசிரியராக, பத்தி எழுத்தாளராக அஸ்வின் சுதர்சன்' என்ற பொருளில் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.குமரனும் 'ஆளுமையுள்ள பத்திரிகையாளன்' என்ற பொருளில் வீரகேசரி பத்திரிகையின் யாழ். பிராந்திய முன்னாள் முகாமையாளர் செ.சௌந்தரராசனும் கருத்துரைகளை வழங்கினர்

அஸ்வினின் ஆளுமைத் திறத்தை வெளிக்கொணரும் வகையில் விவரணப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டது. இதனை அஸ்வினின் சகோதரர் முன்னாள் ஊடகவியலாளர் சுகிர்தன் தயாரித்திருந்தார்.

அஸ்வினின் நினைவுகளைச் சுமந்த 'கோடுகளால் பேசியவன்' என்ற நூலை எழுத்தாளர் வே.தபேந்திரன் வெளியிட்டு வைக்க அஸ்வினின் தாய், தந்தை, புதல்வி ஆகியோர் இணைந்து பெற்றுக்கொண்டனர். கலந்து கொண்ட யாவருக்கும் நூல் பிரதி இலவசமாக வழங்கப்பட்டது.

அஸ்வினின் குடும்பத்தினர் சார்பில் பற்றிக் அல்பேட் சுவர்ணா நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்வில் மூத்த' இளம் ஊடகவியலாளர்கள், ஊடக ஆர்வலர்கள், அஸ்வினின் குடும்பம் சார்ந்தவர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

(படம்: 20 ஆம் பக்கத்தில்)

# மூன்றாவது ஒரு நாளிலும் ஆஸியை துவம்சம் செய்து இந்தியா உச்சம்!




இந்தூர்,செப்.25.

இந்தூரில் நடைபெற்ற 3 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 47.5 ஓவர்களில் 294 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா – ஆஸ்திரேலியா இடையிலான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இந்தூரில் நேற்று நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத் தைத்தெரிவுசெய்த ஆஸ்திரேலியா 6 விக்கெட் இழப்பிற்கு 293 ஓட்டங்களைச்சேர்த்தது. ஆரோன் பிஞ்ச் 124, ஸ்மித் 63, வார்னர் 42 ஓட்டங்களை எடுத்தனர். இந்திய அணி சார்பில் பும்ரா, குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

பின்னர் 294 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியாவின் ரோகித் சர்மா, ரகானே ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இதனால் 8.3 ஓவர்களில் 50 ஓட்டங்களைத் தொட்ட இந்தியா, 15 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

ரோகித் சர்மா 42 பந்துகளிலும், ரகானே 50 பந்துகளிலும் அரைசதம் அடித்தனர். இந்தியாவின் எண்ணிக்கை 21.4 ஓவர்களில் 139 ஓட்டங்களாக இருக்கும்போது ரோகித் சர்மா 62 பந்துகளில் 6 பவுண்டரி, 4 சிக்சருடன் 71 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். சிறிது நேரத்தில் ரகானே 76 பந்தில் 9 பவுண்டரியுடன் 70 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

3ஆவது விக்கெட்டுக்கு விராட் கோலியுடன் ஹர்திக் பாண்டியா ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடினார்கள். ஆஸ்திரேலியா சுழற்பந்து வீச்சாளர் ஆஷ்டோன் அகர் பந்து வீசவந்தபோதெல்லாம் பாண்டியா பந்தை சிக்சருக்கு தூக்கினார்.

விராட் கோலி 28, கேதர் ஜாதவ் 2 ஓட்டங்களில் வெளியேறினார்கள். ஆனால் ஹர்திக் பாண்டியா உடன் மணீஷ் பாண்டே இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோர். அரைசதம் அடித்த ஹர்திக் பாண் டியா, 72 பந்துகளில் 5 பவுண் டரி, 4 சிக்சருடன் 78 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

இந்திய அணிக்கு 10 ஓட்டங்களே தேவை என்ற நிலையில் டோனி களம் இறங்கினார். இந்தியா 47.5 ஓவரில் 294 ஓட்டங்கல் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. மணீஷ் பாண்டே 36 ஓட்டங்களுடனும், டோனி 3 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை இந்தியா 3-0

# ரூ.2 ஆயிரம் கோடியில் ரஷ்யாவிலிருந்து கப்பல்!

கொழும்பு, செப்.25

இலங்கையின் கடற்படையினருக்கு பயன்படுத்துவதற்காக 135 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் இரண்டாயிரம் கோடி ரூபா) செலவில் ரஷ்ய தயாரிப்பு ஜேபாட் 5.1 கரையோர கண்காணிப்பு கப்பல் கொள்வனவு செய்யப்படவுள்ளது

ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள இந்தக் கப்பல் கடன் அடிப்படையில் பெறப்படவுள்ளது.

ஏற்கனவே ரஷ்யா அனுமதித்திருந்த 165 மில்லியன் டொலர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 135 மில்லியன் டொலர்களை செலுத்திக் கப்பலை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவை என்று ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்காக 135 மில்லியன் டொலர்களுக்கான கடன் வசதியை செய்துதர ரஷ்யா உறுதியளித்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டு வளங்களைத் தாரைவார்ப்பது அடுத்த தலைமுறையையே பாதிக்கும்!

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த எச்சரிக்கை

கொழும்பு, செப்.25

உள்நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு விடுவதனால் எதிர்காலத் தலைமுறையினரே பாதிக்கப்படுவர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுச் சொத்துக்கள், வளங்கள் வெளிநாட்டவருக்கு குத்தகைக்கு விடப்படுவதனால் நாட்டின் எதிர்கால தலைமுறையினரே அதிகளவு பாதிப்பினை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெற்றோர்களைப் போன்றே அரசியல்வாதிகளும் எதிர்கால தலைமுறையினர் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நீதியைப் புரட்டும் பிரசாரங்கள்

இலங்கைப் படைகள் மற்றும் நீதித்துறை விடயங்கள் தொடர்பாக அண்மையில் வெளிவரும் செய்திகள், அத்துறைகள் தொடர்பில் கேலிக்கூத்தான எண்ணப்பாட்டையே தருகின்றன என்பதைச் கூறித்தானாக வேண்டியிருக்கின்றது.

இப்போது இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் பதவியை வகிப்பவர் நீதித்துறையில் இருந்து வந்தவர். வழக்கமாக இப்பதவிக்கு பாதுகாப்புத்துறை தொடர்பான விடயங்களிலும் சர்வதேச அரசியல் மற்றும் சர்வதேச பாதுகாப்புத்துறை சம்பந்தமான அம்சங்களிலும் தேர்ச்சி பெற்றவரைத்தான் நியமிப்பார்கள்.

சுதந்திர இலங்கையில் - குறிப்பாக ஈழத்தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் ஏறத்தாழ ஒரு மரபுவழி யுத்தமாக மாற்றமடைந்த பின்னர் - இந்தப் பாதுகாப்புச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படுபவர் மிக முக்கியமான நபராகக் கருதப்படும் நிலைமை இருந்து வருகின்றது.

அதுவும் இந்தப் பதவியில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் முன்னாளில் இராணுவத்தில் பணிபுரிந்த கேணலுமான கோட்டாபய ராஜபக்ஷ இருந்தபோது அந்தப் பதவிக்கு ஏற்பட்ட 'மவுசே' வேறு.

ஏறத்தாழ இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு சமதையாக இங்கு ஒப்பிடக்கூடிய தரநிலை இதுவாகும்.

இந்தப் பதவிக்கு முன்னாள் சொலிஸிட்டர் ஜெனரலும், பதில் சட்டமா அதிபருமான ஜனாதிபதி சட்டத்தரணி கபில வைத்தியரத்ன இப்போது நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

பாதுகாப்புத் துறையோடு சட்ட விற்பன்னரும் கலக்கின்றபோது, பாதுகாப்பு விடயங்களில் ஒரு நீதிமுறைமை பேணப்படும் என்று நம்பிக்கை ஏற்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால், அந்த நம்பிக்கை - எதிர்பார்ப்பு - சரிவராது என்பது இப்போது மெள்ள மெள்ள புலப்படத் தொடங்கிவிட்டது.

கொழும்பு ஆங்கில இதழ் ஒன்றுக்குப் பேட்டியளித்த வைத்தியரத்ன பாதுகாப்புப் படையினர் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்குமாயின் அவர்கள் தப்பமுடியாது, சட்டத்தை அவர்கள் எதிர்கொண்டேயாக வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இது அவர் கூறித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல. எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான். குற்றம் சுமத்தப்படும் எல்லோரும் சட்டத்தை எதிர்கொண்டாகத்தான் வேண்டும்.

ஆனால், யார் குற்றத்தைச் சுமத்துவது என்பதுதான் கேள்வி.

வன்னி யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் தமிழர்கள் - அப்பாவித் தமிழர்கள் - கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்டார்கள். பல்லாயிரம் தமிழர்கள் பார்த்திருக்க இந்த அநியாயம் - பெரும் கொடூரம் ஈவு, இரக்கமின்றி அரங்கேறியது.

ஆனால், அந்தக் குற்றச்சாட்டுக்கு இலக்கான படையினர் எவரையும் நீதியின் முன் நிறுத்த மாட்டோம் என்பதில் ஜனாதிபதி, பிரதமரில் தொடங்கி - அரசுத் தரப்பினர் அனைவரும் உட்பட - கூட்டு எதிரணியினர் ஈறாக பௌத்த, சிங்கள பேரினவாதத் தேசமே அதில் ஒற்றுமைப்பட்டு நிற்கின்றது. ஒரு குரலாய் நிற்கின்றது.

ஆக, படையினர் மீதான விசாரணை என்பது குற்றச்சாட்டைச் சுமத்துவதற்கான அதிகாரத்தை வைத்துக்கொண்டு, பக்கச் சார்பாகத் தீர்மானிக்கும் தரப்புகளின் கையில் தங்கியுள்ளதே தவிர, பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன கூறுகின்றமை போல நீதியின்பால் நடப்பதாகவில்லை.

அப்படி நீதியின்பால் நடப்பது என்பது போல சட்ட விற்பன்னரான பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றமை வெறும் பம்மாத்து அன்றி வேறல்ல. இது அவருக்குக் கூட நன்கு புரியும்; தெரியும்.

*“குற்றம் இழைத்த படையினர் கீழ்மட்டத்தவராக இருக்கலாம். அல்லது உயர்ந்தநிலை அதிகாரியாக இருக்கலாம். எல்லோரும் சட்டத்தை எதிர்கொண்டேயாக வேண்டும். பிரகீத் எக்னெலிகொட வழக்காக இருக்கலாம், லஸந்த விக்கிரமதுங்க படுகொலையாக இருக்கலாம். விசாரணைகள் சட்டரீதியாகவும், சட்டப்படியும் முன்னெடுக்கப்படும். யாரும் தப்பமுடியாது.”* - என்று முன்னாள் பதில் சட்டமா அதிபரும் சொலிஸிட்டர் ஜெனரலும், தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கபில வைத்தியரத்ன கூறுகின்றார்.

யுத்த காலத்தில் பிரகீத் எக்னெலிகொட மாத்திரம் கடத்தப்பட்டுக் காணாமல் போகவில்லை. கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள் வரிசையில் லஸந்த விக்கிரமதுங்க மட்டும் அடங்கவில்லை. அவர்கள் இருவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். அவ்வளவுதான்.

அவர்களைப் போல கொன்றொழிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் பட்டியல் நீண்டது பாதுகாப்புச் செயலாளரே!

தராக்கி சிவராமில் தொடங்கி, நடேசன், நிமலராஜன், சுகிர்தராஜன் என்று அந்தப் பட்டியல் நீண்டது. காணாமலாக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் பலர். கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர் பட்டியலும் உண்டு.

உங்களுக்கு ஆக எக்னெலிகொட, லஸந்த, கீத் நொயர் எனத் தென்னிலங்கைப் பத்திரிகையாளர் பட்டியல்தான் தெரிகின்றது.

இதில்தான் நாம் முற்சொன்ன 'குற்றஞ்சாட்டுபவர்' யார் என்ற தகுதி நிலை வருகின்றது. நீங்கள் விரும்பிய விவகாரங்கள் குறித்து மட்டும் குற்றச்சாட்டுகளை வைப்பீர்களாம், மற்றையவற்றை விட்டுவிடுவீர்களாம், அதனைப் பார்த்து நீங்கள் நீதி செய்கின்றீர்கள் என நாம் வியக்க வேண்டுமாம்...!

இவை எல்லாம் - நீங்கள் செய்வது எல்லாம் - நீதியைப் புரட்டும் கோயபலஸ் பிரசாரமன்றி வேறில்லை.

## திலீபனின் 30 ஆம் ஆண்டு நினைவு மன்னாரில்!



தியாகதீபம் திலீபனின் 30 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் உணர்வெழுச்சியுடன் நினைவு கூரப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டம் ஆட்காட்டிவெளி அடம்பனில் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

ஆட்காட்டிவெளி அடம்பனில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் அலுவலகத்தில் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்குப் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உறுப்பினர்கள், வர்த்தக சங்கத்தினர் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

## ஊர்காவற்றுறை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு திறந்து வைப்பு!



யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு நேற்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டடமானது மலேரியா காசநோய் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கட்டடத்தின் கட்டட கட்டுமானப் பணிகளை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை, வெளி நோயாளர் கட்டடங்களானது யாழ்ப்பாணத்தில் மூன்று வைத்தியசாலைகளில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## மன்னார் மறைமாவட்ட உறுதிப்பூசுதல் நிகழ்வு!

மன்னார், செப். 25

மன்னார் மறைமாவட்டத்தின், மன்னார் தூய செபஸ்தியார் பேராலயப் பங்கில் 136 இளம் வயதினருக்கான உறுதிப்பூசுதல் வழங்கும் திருநிகழ்வு நேற்று நடைபெற்றது.

கத்தோலிக்கத் திருச்சபையில் உள்ள இறைமக்களுக்கு ஒவ்வொரு பருவத்திலும் திருவருட்சாதனங்கள் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில், கத்தோலிக்க திருச்சபையின் இளம் வயதினரின் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்திலே, அவர்களைக் கத்தோலிக்க விசுவாச, ஆன்மிக, சமூக ஈடுபாட்டு அருள் நிலைப்பண்புகளிலேஆளுமை செறிந்தவர்களாக உருவாக்க மேற்கொள்ளப்படும் அருட்பணிச் செயலாக்கத்தில் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனமும் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

கத்தோலிக்க திருச்சபையின் இறைமக்களின் அருட்பணிக்காக அமைக்கப்படும் பங்குகள் ஒவ்வொன்றிலும் உள்ள இளம் வயதினருக்கு, ஒருங்கிணைந்த, மிகவும் ஆழமான அறிவூட்டல் பயிற்சியோடு ஒவ்வொரு வருடமும் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் அது சார்ந்திருக்கும் மறைமாவட்ட ஆயர் அவர்களால் வழங்கப்படுகின்றது.

## இரு வர்த்தக நிலையங்கள் ஏறாவூரில் தீ வைத்து எரிப்பு!

மட்டக்களப்பு, செப். 25

ஏறாவூர் நகரில் ஹோட்டல் ஒன்றும் பல்பொருள் கடையும் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் எரித்தும் உடைத்தும் சேதமாக்கப்பட்டுள்ளன என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர்- மட்டக்களப்பு பிரதான நெடுஞ்சாலை கலைமகள் வித்தியாலய வீதிக்குத் திரும்பும் சந்தியிலேயே இரு கடைகளும் உள்ளன.

இதனால், ஒரு கடை எரிந்து சேதமடைந்துள்ளதோடு, அருகிலுள்ள மற்றொரு கடையின் கண்ணாடி அலுமாரிகளும் உடைந்து காணப்பட்டுள்ளன.

வழமை போன்று நேற்று முன்தினம் இரவு கடையை மூடிவிட்டு நேற்று அதிகாலை 5 மணியளவில் கடை உரிமையாளர்கள் கடைக்கு வந்து பார்த்தபோதுதான், கடை எரிந்திருந்த நிலையில் காணப்பட்டதையடுத்து அவர்கள் ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த ஹோட்டல் மூன்று நாள்களுக்கு முன்புதான் புதிதாகத் திறக்கப்பட்டது என்று அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் பற்றி ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

### நாளை

26.09.2017
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : அனுசம் காலை 7.58 வரை
திதி : சஷ்டி பி.ப. 4.34 வரை
சுபநேரம் : 10.32 – 12.02 வரை
இராகுகாலம் : 3.02 – 4.32 வரை

# வெறுமையான நாற்காலிகளின் முன் ஐ.நாவில் உரையாற்றினார் மைத்திரி!


கொழும்பு, செப். 25

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றிய போது, அரங்கில் பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாகவே காட்சியளித்தன என்று நியூயோர்க் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. பொதுச்சபையின் 72 ஆவது கூட்டத் தொடரின் முக்கிய அம்சமாக, உலகத் தலைவர்களின் பொது விவாதம், கடந்த 19 ஆம் திகதி தொடங்கி நேற்றுமுன்தினம் நிறைவுபெற்றது.

இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகப் பங்கேற்று உரையாற்றியிருந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், முதலாவது நாளிலேயே - 19 ஆம் திகதி பிற்பகல் அமர்வில் ஜனாதிபதி மைத்திரிக்கு உரையாற்றும் வாய்ப்புக் கிடைத்திருந்தது.



காலை அமர்வில் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் உரையாற்றியிருந்தார். அவரது உரையைத் தொடர்ந்து பெரும்பாலான உலகத் தலைவர்கள், பொதுச்சபையில் இருந்து வெளியே சென்றிருந்தனர்.

இதனால், 27 ஆவது பேச்சாளராக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றியபோது பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாகக் காட்சியளித்தன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உரையை சிங்களத்திலேயே நிகழ்த்தினார்.

அதேவேளை, இம்முறை பொதுச்சபை அமர்வில் பலஸ்தீன பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அதிக பட்சமாக 43 நிமிடங்கள் உரையாற்றியிருந்தார்.

அவரையடுத்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 41 நிமிடங்கள் உரையாற்றினார்.

லித்துவேனிய ஜனாதிபதியின் உரையே மிகக் குறுகியதாக இருந்தது. அவர் வெறும் 5 நிமிடங்கள் மட்டுமே உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## வடமராட்சியில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். குடா நாட்டில் நிலவும் கடும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வாக மழை நீர் சேகரிப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

இதன்படி, குடாநாட்டில் பெய்யும் மழையில் 20 சதவீதத்தை வடமராட்சியில் உள்ள 78 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணம் கொண்ட நீர்ப்பரப்பில் சேகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு வட மாகாண சபை முதலமைச்சரதும், அமைச்சரவையினதும் அனுமதி கிடைத்துள்ளது.


ஓய்வுபெற்ற விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளரும் விவசாயத் திணைக்கள முன்னாள் இயக்குநருமான 'வைத்தியஜோதி' பொறியியலாளர் ஏ.டி.எஸ்.குணவர்த்தன இந்தத் திட்டத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வட மாகாண அபிவிருத்திச் சபை மற்றும் பிரதமரால் அமைக்கப்பட்ட கொள்கை அபிவிருத்தி அலுவலகமும் இந்தத் திட்டத்தை மேற்பார்வை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று முதல் காலநிலையில் மாற்றங்கள்!

கொழும்பு, செப். 25

இன்று முதல் காலநிலையில் மாற்றம் ஏற்படும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



செப்ரெம்பர் மாதம் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் நாட்டின் காலநிலையில் மாற்றங்களை எதிர்பார்க்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக மேல் மற்றும் தென் பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும், கடும் காற்று வீசக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

## வறட்சி நிவாரணம் கோருகின்றனர் ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் மக்கள்!



கிளிநொச்சி, செப். 25

கிளிநொச்சி - ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் கிராமத்தின் அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்து தருமாறும், வறட்சி நிவாரணங்களைப் பெற்றுத்தருமாறும் ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கண்ணகைபுரம் கிராமத்தில் பிரதான வீதி முதல் ஏனைய குடியிருப்பு வீதி வரை எந்த வீதிகளும் புனரமைக்கப்படாமல் உள்ளன.

அத்துடன், தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்த போதிலும், எமக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் தொடர்ந்தும் சிக்கலை எதிர்கொண்டு வருகின்றோம்.



இதேவேளை, அண்மைய நாள்களாக பல்வேறு பிரதேசங்களிலும் வறட்சி நிவாரணங்கள் வழங்கப்பட்டுவருகின்றபோதும், எமக்கான வறட்சி நிவாரணங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

எனவே, எமது நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதுடன், வறட்சி நிவாரணங்களையும் பெற்றுத்தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## போரை முடித்த பெருமை எனக்குத் தான் உண்டு!

### உரிமைகோருகிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா!

கொழும்பு, செப். 25

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நிலவிய போரை முடிவுக்குக் கொண்டுவந்த பெருமை என்னையேசேரும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடமிருந்த 75 வீதமான நிலப்பரப்பை நானே வெற்றி கொண்டேன். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ 25 வீதம் மாத்திரமே யுத்தத்தை நிறைவு செய்தார் என்று சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மீரிகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். நாட்டில் இடம்பெற்ற போரை நானே முடிவுக்கு கொண்டுவந்தேன் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்து வருகின்றார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்து, முன்னாள் இராணுவத் தளதிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.



(க)

# வாழைச்சேனை கடதாசி ஆலை விரைவில் புனரமைக்கப்படும்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 25

வாழைச்சேனை கடதாசி ஆலை தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடி மிக விரைவில் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு கடதாசி ஆலை பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



வாழைச்சேனை கடதாசி ஆலை அமைக்கப்படுவதற்கு நானூறு ஏக்கர் காணி பொது மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்டதாக நாங்கள் அறிகின்றோம். இந்தக் காணிகள் முழுவதும் இந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணி.

இந்தக் காணியை அரசுக்குக் கொடுப்பதற்கும், அரசு சுவீகரிப்பதற்கு சம்மதம் தெரிவிப்பதற்கும் காரணம் இங்கு தொழிற்சாலை அமைக்கப்பட்டு வேலைவாய்ப்புக்கிடைக்கும் என்பதால் காணியை விட்டுக் கொடுத்தாலும் பரிகாரமாக வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அரசு காணியைச் சுவீகரிக்கச்சம்மதம் தெரிவித்தனர்.

யுத்தம் மற்றும் ஏனைய பிரச்சினைகள் காரணமாகத் தொழிற்சாலை சிலகால கட்டத்தில் மூடப்பட்டது. ஆனால், ஓரளவுக்குத் தொழிற்சாலை இயங்கிவந்ததாகவும், சிலர் வேலை செய்தனர் எனவும் நான் அறிகின்றேன்.

தற்போது தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் எந்தவித பங்களிப்பையும் செய்யவேண்டிய அவசியம் இல்லை. தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டிய முழு பங்களிப்பை கொரிய நிறுவனம் செய்வதற்குத் தயாராக உள்ளது.

கொரியா நிறுவனத்தினர் சுதந்திரமாகச் செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் 2018ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பதாக ஆலையைப் புனரமைப்புச் செய்து இயங்க நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பது அவர்களுடைய நம்பிக்கையாக உள்ளது.



அபிவிருத்தியைப் பற்றி, தொழில் வாய்ப்பை பற்றிப் பேசிக்கொண்டு, பத்து லட்சம் தொழில் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று பேசுகின்ற அரசு பல நூற்றுக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி வந்த தொழிற்சாலை மூடப்பட்டு இருக்கின்ற ஒரு சூழலில் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கு அரசு பங்களிப்பில்லாமல் தனியார் பங்களிப்பின் மூலமாக ஆரம்பிக்கக்கூடிய வழிவகை இருக்கின்றது. ஆனால், ஆரம்பிக்காமல் இருப்பதற்கு எவ்விதமான காரணமும் கிடையாது.

மறைமுகமாக ஏதும் காரணங்கள் இருந்தாலும், வெளிப்படையாக எங்களுக்குத் தெரியக்காரணங்கள் இருக்கின்றன என எங்களுக்குத் தெரியவில்லை.

ஆலை புனரமைப்பு விடயமாகத் தனிப்பட்ட முறையில் பிரதமருடன் கலந்துரையாடி கொரியா நிறுவனம் இங்கு முதலீடு செய்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.


எங்களது மக்களை நாங்கள் கைவிட முடியாது. எங்களது ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படுமாக இருந்தால் காணியை வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற காரணத்துக்காகக் கொடுத்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்குக் கிடைக்கும் வரப்பிரசாதம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம் மற்றும் வாழைச்சேனை கடதாசி ஆலையின் தொழிற் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, வாழைச்சேனை கடதாசி ஆலை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையில் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டார். அத்துடன், அங்கு ஆலையின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் மேற்கொண்டதுடன், பின்னர் வாழைச்சேனை கடதாசி ஆலையின் நிலைமைகள் தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## என்னைக் கொல்ல வருபவன் பைத்தியக்காரனே

### மகிந்த தெரிவிப்பு!



பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளமையால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் வீட்டுக்குள் கத்தியுடன் சென்ற நபரைப் பாதுகாப்புத் தரப்பினர் கைது செய்தமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே மஹிந்த ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் எவரேனும் கத்தியை எடுத்துக்கொண்டு தன்னைக் கொலைசெய்ய வருவாரேயானால் அவர் பைத்தியக்காரனாக இருப்பார் எனவும் அவர் கூறியுள்ளார்.

## மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காத பட்சத்தில் ஐ.தே.கட்சியை வீட்டுக்கு அனுப்பி வையுங்கள்!



அமைச்சர் கபீர் ஹாஸிம் கூறுகிறார்




மட்டக்களப்பு, செப். 25

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காத பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை வீட்டுக்கு அனுப்பிவையுங்கள் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஸிம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச்செய்ய அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாலை கல்லடியில் இடம்பெற்றது.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கபீர் ஹாஸிம், ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களை எவ்வாறு எதிர்கொள்வது, ஐக்கிய தேசியக் கட்சியை மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் எவ்வாறு ஸ்திரப்படுத்துவது என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

# ஐ.நா. பொதுச்செயலருடன் ஜனாதிபதி மைத்திரி சந்திப்பு

## இலங்கைக்கு வாருங்கள் என்றும் அழைத்தார்

கொழும்பு, செப். 25
ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்ரெசை, இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக, இலங்கை ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

பலமான நல்லிணக்கத்துடன் சுபீட்சமான தேசமாக இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளது என ஐ.நா பொதுச் செயலர் உறுதியளித்தார்.

அத்துடன், இலங்கையுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டு அனைத்து இலங்கையர்களுக்கும் சுபீட்சம் மற்றும் சக வாழ்வு நிறைந்த, உலகின் முன்மாதிரியான தேசமாக எழுந்திருப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை முழுமையாக உதவும் என்றும் ஐ.நா. பொதுச் செயலர் தெரிவித்தார்.



இலங்கையுடனான ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களைப் பலப்படுத்தி, நாட்டுக்கும் மக்களுக்கும் முழுமையான உதவிகளை வழங்கத் தொடர்ச்சியாக, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குட்ரெஸ் உறுதியளித்தார்.

அதேவேளை, அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது எனத் தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, இதற்கு உலகின் அனைத்து நாடுகளினதும் ஒத்துழைப்பும் நட்புறவும் அவசியம் என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொண்டு நல்லிணக்கக் கொள்கையுடன் பயணிக்கும் இலங்கையின் தற்போதைய முன்னேற்றங்களை நேரில் கண்டறிவதற்காக, இலங்கைக்கு பயணம் செய்யுங்கள் என்றும் ஐ.நா. பொதுச் செயலருக்கு அழைப்பு விடுத்தார்.

# அதிக விலையில் தேங்காயை விற்றால் தண்டனை!

## தெங்கு உற்பத்தி சபையின் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 25
தேங்காய் ஒன்றின் அதிக பட்ச சில்லறை விலை 75 ரூபாவாக இருக்க வேண்டும்.

அதைவிட, அதிக விலைக்கு தேங்காய் விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும் எனத் தெங்கு உற்பத்திச் சபையின் தலைவர் கபில யகன் தவல தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேங்காய் ஒன்றை நுகர்வோரிடம் சேர்க்கும் வரையிலான முழுச்செலவுகளையும் கருத்தில் கொள்கின்ற போது தேங்காய் ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலையை எழுபத்தைந்து ரூபாவாக வரையறுத்துக் கொள்ள முடியும்.

மேலும், கடந்த வாரம் தேங்காய் ஏலத்தில் விற்கப்பட்டது. அதன்போது தேங்காய் ஒன்றின் விலை 49 ரூபாவாக இருந்தது.

எனவே, மொத்த விற்பனையாளர்கள் தேங்காய் ஒன்றுக்கு பத்து ரூபாவும் சில்லறை விற்பனையாளர்கள் பத்து ரூபாவும் நிர்ணயிப்பதுடன் இன்னும் ஐந்து ரூபாவை மேலதிகமாகச் சேர்த்தாலும் தேங்காய் ஒன்றை அதிகபட்சசில்லறை விலையாக எழுபத்தைந்து ரூபாவிற்கு விற்பனை செய்யமுடியும்.

அத்துடன், தேங்காய் ஒன்று நூற்றுப் பத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது எனத் தவறான பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது.

அதாவது, தொழில்துறையில் ஈடுபடுபவர்கள் தேங்காய் கொள்வனவு செய்யும் போது அதனை கிலோ கிராம் அளவிலேயே பெறுகின்றனர்.

ஆகவே, கிலோஒன்றின் விலைதான் நூற்றுப்பத்து ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறதே தவிர, சாதாரண மக்கள் கொள்வனவு செய்யும் தேங்காயின் விலை அதுவல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாரம்மலையில் லொறி விபத்து; இருவர் பலி!



கொழும்பு, செப். 25
வேகமாகச் சென்ற லொறியொன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதில் இருவர் கொல்லப்பட்டனர்; ஆறு பேர் காயமடைந்தனர்.

எட்டுப் பேரை ஏற்றிச் சென்ற அந்த லொறி, நேற்றுமுன்தினம் நள்ளிரவு சுமார் 12.15 மணியளவில் நாரம்மலை, உடபொல சந்திக்கருகே சென்று கொண்டிருந்தது.

அப்போது திடீரென்று சாரதியின்கட்டுப்பாட்டை இழந்த லொறி, வீதியை விட்டு விலகி, அங்கிருந்த மரமொன்றுடன் மோதியது.

இதில், லொறியில் இருந்த 48 வயதுப் பெண்ணும் 50 வயது ஆணும் உயிரிழந்தனர்.

சாரதி உட்பட ஏனைய ஆறு பேரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# 2018 வரவு - செலவுத் திட்டத்தில் எந்தவித சலுகைகளும் இல்லை!

## பந்துல குணவர்த்தன கூறுகிறார்

2018 ஆம் ஆண்டுக்காக எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கான எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில், சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு செய்துகொண்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரமே வரவு - செலவுத்திட்டம் தயாரிக்க வேண்டியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டுக்காக அரசு சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கான சலுகைகளை எதிர்பார்க்க முடியுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



நிதி அமைச்சர் மங்கள சமரவீர, வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்குச் சலுகை வழங்குவதற்கு எதிர்பார்த்தாலும் அவரால் அதனைச் செய்ய முடியாது.

ஏனெனில், சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை கடன் பெற்றுள்ளது. அதற்காக நாணய நிதியத்துடன் உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டுள்ளது.

அந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஐந்து பிரதான நிபந்தனைகள் உள்ளன. அதாவது, அரசின் வருமானத்தை விரைவாக அதிகரிக்க வேண்டும். அரசாங்கத்தின் செலவுகளை முடியுமானவரையில் குறைக்க வேண்டும், வரவு மற்றும் செலவின் இடைவெளியைக் குறைக்க வேண்டும், நாணயத்தின் பெறுமானத்தை அதிகரிக்க வேண்டும், அரசின் நட்டமீட்டும் நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த வேண்டும்அல்லதுவிற்பனை செய்யவேண்டும் என்பனவே அந்த நிபந்தனைகளாகும்.

எனவே, இந்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் வகையிலேயே வரவு செலவுத் திட்டம் தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நிதி அமைச்சர் தள்ளப்பட்டுள்ளார்.

ஆகவே, சமர்ப்பிக்கப்படவுள்ளவரவு-செலவுத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிள்ளைகள் வாகனங்களைச் செலுத்தினால் பெற்றோர் மீது நடவடிக்கை!

பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்கள் வாகனங்களைச் செலுத்தும் பட்சத்தில், அவர்களது பெற்றோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இதுபற்றித் தெரிவித்த மேற்படி சபையின்தலைவர்கலாநிதி சிசிர கோதாகொட-

அண்மைக் காலமாகக் குறைந்த வயதுடையவர்கள் வாகனங்களைச் செலுத்துவதால் இடம்பெறும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தலாவை பகுதியில், பத்தாம் வகுப்பு மாணவர் ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அதிவேகமாகச் செலுத்தப்பட்ட இந்த மாணவரது மோட்டார் சைக்கிள், வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியது என்று தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்புத் துறைமுக நகரத்தை உள்ளடக்கிய இலங்கையின் புதிய வரைபடம் அடுத்த ஆண்டு!

கொழும்பு, செப். 25

கொழும்பு துறைமுக நகரத்தை உள்ளடக்கிய, இலங்கையின் புதிய வரைபடம் அடுத்த ஆண்டு வெளியிடப்படவுள்ளது.

புதிய வரைபடத்தை தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன என்றும் அடுத்த ஆண்டில் அது வெளியிடப்படும் என்றும்நிலஅளவைத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய வரைபடம், கொழும்பில் அமைக்கப்படும் துறைமுக நகரம் உள்ளிட்ட மாற்றங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என்று நிலஅளவைப் பணிப்பாளர் உதயகாந்த தெரிவித்துள்ளார்.

இந்த திருத்தப்பட்ட வரைபடம், அம்பாந்தோட்டைத் துறைமுக கட்டுமானப் பணிகளின் பின்னரான திருத்தங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை உருவாக்குவதற்காக, இலங்கையின் நிலப் பகுதியில் கடல் நீர் நிரப்பப்பட்டதும், கடற்பகுதியில் மண் நிரப்பப்பட்டு கொழும்புத் துறைமுக நகரம் உருவாக்கப்பட்டுள்ளதால், தரைப் பகுதியின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதுமான சூழலில் புதிய வரைபடம் இந்த மாற்றங்களை உள்ளக்கியதாக அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## தினசரி ராசி பலன் 25 .09.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 09ஆம் நாள் திங்கட்கிழமை. பஞ்சமித்திதி. பகல் 02.28மணி வரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம் -அனுஷம் முழுவதும். சித்தயோகம் பகல் 2.28 மணி வரை. பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்**- மு.ப. 7.31 மணி முதல் 09.01 மணி வரை.

**சுபநேரம்**- பகல் 12.02 மணி முதல் 01.33 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- திதி இல்லை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** அனுஷம்

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் அமைதி குன்றும். தொழிலில் பல இடையூறுகள் தோன்றும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும்.

**ரிஷபம் :** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாக இருக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**மிதுனம்:** உயர்வான நாள். வருமானம் வளமாக இருக்கும். எடுத்த காரியத்தில் வெற்றியும் நன்மையான பலன்களும் கிட்டும். குடும்ப ஒற்றுமை பலப்படும். சிலருக்கு வெளிநாட்டு தொழில்வாய்ப்பு கிடைக்கும்.

**கடகம் :** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். பிரிந்த உறவுகள் ஒன்று சேரும்.

**சிம்மம் :** சஞ்சலமான நாள். மனதில் யோசனை தோன்றிக் குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும்.

**கன்னி :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும்.

**துலாம் :** சுபீட்சமான நாள். பணபலம் பெருகும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். பெண்களின் திருமண காரியம் மனம் போல் அதிகரிக்கும். பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும்.

**விருச்சிகம் :** யோகமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். காணி வாங்கும் யோகம் உண்டாகும். வாகன வசதி கிடைக்கும்.

**தனுசு :** யோசனையான நாள். பணவரவு குறையும். மனதில் சஞ்சலம் பயம் தோன்றும். செலவுகளை சமாளிக்க முடியாமல் தடுமாற்றம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வித் தடை உண்டாகும்.

**மகரம் :** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு மேம்படும். சகோதர உறவு பலப்படும். வியாபாரம் செழித்தோங்கும். சுயதொழில் மேன்மை அடையும்.

**கும்பம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். வேலையில் கவனக் குறைவால் அதிகாரிகளின் கெடுபிடிக்கு ஆளாக நேரிடும்.

**மீனம் :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கொடுக்கல் வாங்கல் சுமுகமாக நடக்கும்.

**சந்திராட்டமநாள்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# வழங்கும் அதிகாரத்தை எடுக்கவும் புதிய அரசமைப்பில் விசேட ஏற்பாடு!

### ஜயம்பதி விக்கிரமரத்ன கூறுகிறார்

கொழும்பு, செப். 25

அரசமைப்பினூடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரப் பகிர்வினால், பிரிவினைவாதம் உருவாக மாட்டாது. அவ்வாறு உருவாகும் பட்சத்தில் அந்த அதிகாரத்தை திருப்பி எடுத்துக் கொள்வதற்கு அரசமைப்பில் சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்று அரசியலமைப்பு நிபுணரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் குறிப்பிடும் போது ஏகீய என்ற சொல்லை ஆங்கிலப் பதிப்பிலும் பதிவதற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது.



இந்த அதிகாரப் பகிர்வு குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. தற்போதைய அரசமைப்பிலும் கூட இல்லாத ஒரு புதிய அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு கொடுத்துள்ள அதிகாரத்தை வைத்து மாகாணம் நாட்டின் தேசிய நலனுக்கு எதிராக செயற்படுவதாக கண்டால், அந்த அதிகாரங்களை மீளவும் பெற முடியும். அல்லது மாகாண சபையையே கலைத்து விடவும் முடியும் எனவும் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன விளக்கம் அளித்துள்ளார்.

(க)

# முல்லைத்தீவு திம்பிலிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு!

### விசனம் வெளியிடும் மக்கள்

முல்லைத்தீவு , செப். 25

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள திம்பிலிப்பகுதியில் சட்டத்திற்கு முரணான மணல் அகழ்வு இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் முறையிட்டுள்ள போதிலும் இதுவரையில் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான முறைப்பாடொன்று வடமாகாணசபை உறுப்பினர்துரைராசா ரவிகரனுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தவை



வருமாறு:-

கடந்த 20 ஆம் திகதி திம்பிலிவாழ் மக்கள் இந்த முறைப்பாட்டை என்னிடம் முன்வைத்தனர்.

மறுநாளே அந்த இடங்களுக்குச் சென்று சட்டத்திற்கு முரணாக மணல் எடுக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு உறுதிப்படுத்தினேன்.

இது தொடர்பாக உரிய இடங்களுக்கு கொண்டு சென்று சட்டத்திற்கு முரணான மணல் அகழ்வினை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடையாளம்
கொள்கை ஆய்வுக்கான நிலையம்
Adayaalam Centre for Policy Research

# சமூக வாழ்க்கையில் ஆழ ஊடுருவியுள்ள இராணுவம்

# மாதம் ரூ.30 ஆயிரம் வேதனம் பெறும் பண்ணைப் பணியாளர்கள்



- பி.மாணிக்கவாசகம் -
(நேற்றைய தொடர்ச்சி...)

மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வுப் பயிற்சியின் பின்னர் சமூக வாழ்க்கையில் இணைக்கப்பட்டு, தொழில்வாய்ப்பின்றி தடுமாறிக் கொண்டிருந்த முன்னாள் போராளிகளுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலேயே சிவில் பாதுகாப்புத் திணைக்களம் பண்ணைகளில் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. அதேபோன்று இந்தப் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளிகளில் ஆசிரியைகளுக்கானநியமனங்களையும் அந்தத் திணைக்களம் வழங்கியது. அத்துடன் ஏற்கனவே செயற்பட்டு வந்த முன்பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியைகளுக்கு அந்தத் திணைக்களம் தானே முன் வந்து சம்பளத்தை வழங்கி, அவர்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

### சமூக அரசியல் பொருளாதாரச் செயற்பாட்டு சீர்குலைவு

பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்தத் தொழில் வாய்ப்பு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்திருந்தது. ஆனால், குடும்பப் பொருளாதாரத்துக்காக சிவில் பாதுகாப்புத் திணைக்களத் தின் ஊடாக இராணுவத்திலேயே அவர்கள் தங்கியிருக்க நேர்ந்தது. இதுவே பிரச்சினைகளுக்கு அடிப் படையாகி விட்டது என்று அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின்அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

போரினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்திற்கு வழியற்றிருந்த சமூகத்தினருக்கு சிவில்பாதுகாப்புத் திணைக்களம் பேருதவியாக வாழ்வாதார உதவிகளை வழங்கியது. இதுவே, தமது குடும்பப் பொருளாதாரத்திற்காக அவர்களை இராணுவத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கியிருக்கின்றது. இவ்வாறு தங்கியிருப்பதே பிரச்சினைகளுக்கு அடிப்படையாகும்.


இத்தகைய பொருளாதார தங்கியிருப்பானது சிவில் சமூக மற்றும் அரசியல் ஈடுபாட்டில் நேரடியானதும், மறைமுகமானதுமான ஒடுக்குமுறைக்கும் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை கட்டுப்படுத்தி, அந்த சமூக அடையாளத்தையும், அதன் கட்டமைப்படன் கூடிய ஒருங்கிணைவையும் சீர்குலைப்பதற்கும், இதற்கும் மேலாக அந்த சமூகத்தைச் சார்ந்த பெண்களை ஓரங்கட்டி வைப்பதற்கும் வழிகோலியுள்ளது என அந்த அறிக்கை கூறுகின்றது.

தமிழ் சமூகத்திற்குள்ளே ஆழமாக ஊடுருவுவதற்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களமே முழுமுதற் கருவியாக அமைந்திருக்கின்றது. இவ்வாறு இராணுவமயப்படுத்தலை கிளர்ச்சித் தடுப்புத் திட்டத்தின் ஓர் அங்கம் என்று அரசாங்கம் சர்வதேச

### சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டுள்ள பெண்கள்

சமூகத்திற்கு மூடிய கதவுகளுக்குள்ளே தற்காத்துக் கொண்ட போதிலும், யுத்தத்தின் பின்னர் உருவாகியுள்ள தமிழ் அரசியல் செயற்பாட்டுக்கான இடைவெளியையும் அரசியல் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவதே அதன் உண்மையான நோக்கம் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அத்துடன், தமிழ் அரசியல் நீண்ட காலத்திற்கு இயல்பு நிலையை எட்ட





முடியாமல் இருப்பதற்கும், அரச மேலாண்மைமிக்க சிங்கள தேசியவாதச் செயற்பாட்டை சவாலுக்கு உட்படுத்துவதைச் செயலிழக்கச் செய்வதற்கும் இந்த இராணுவமயப்படுத்தல் நடவடிக்கைகள் வழி சமைத்துள்ளன எனவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

வன்னியில் உண்மையானதொரு ஜனநாயக சமூகம் மலர்வதைத் தடுப்பதற்காகத் தொடர்கின்ற இராணுவமயப்படுத்தல் செயற்பாடுகளில் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் என்பது ஓர் அங்கம் மட்டுமே. நாட்டின் தலைநகராகிய கொழும்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை வைத்து வன்னியில் ஜனநாயக சுதந்திரங்களை எட்டுவதற்குரிய அரசாங்கத்தின் முன்னேற்றத்தை அளவிட முடியாது. ஏனெனில் உண்மையான ஜனநாயகத்தை அடைவதற்காக மிகச் சிறிய அளவிலான மாற்றங்களே அங்கு நிகழ்ந்திருக்கின்றன எனவும் அந்த அறிக்கை குறிப்பிட்டிருக்கின்றது.

### சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டமைப்பு

வடகிழக்கு பிரதேசங்களின் எல்லைக் கிராமங்கள் உட்பட, திருகோணமலை, அம்பாறை, வெலிஓயா (மணலாறு), கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஆகிய பிரதேசங்களில் வேறுவேறான 23 தலைமை அலுவலகங்களை சிவில் பாதுகாப்புத் திணைக்களம் கொண்டிருக்கின்றது. இவற்றின் ஊடாக, நன்கொடைச் செயற்பாடுகளுக்கான சேவா வனிதா, விளையாட்டுத்துறை பயிற்சிக்கான விளையாட்டுக்கான நிதிப் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகளில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், வன்னிப்பிரதேசத்தில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்திட்டப்பிரிவு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்தப் பிரிவின் கீழேயே பண்ணை விவசாயம், கால்நடை விவசாயம் மற்றும் சிவிலியன்களுக்கான வேலைத்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் அதிஉயர்மட்ட போரியல் பயிற்சி பெற்ற சிப்பாய்களும், தொழிலுக்காக இணைக்கப்பட்ட சாமான்யர்களும் பணியாற்றுகின்றார்கள். ஆயினும் இவர்கள் அனைவரையும் இராணுவ சிப்பாய்கள் என்றும், சிவில் பாதுகாப்புப் படையினர் எனவுமே அழைக்கின்றார்கள்.

### தொழில் புரிந்து வரும் 3,500 பேர்

கடந்த 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கான ஆட்சேர்ப்பின்மூலம் தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 3 ஆயிரத்து 500 பேர் வரையில் தொழில் புரிந்து வருகின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் முன்னாள் விடுதலைப்புலி போராளிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் பண்ணைத் தொழிலாளிகளாகவும், முன்பள்ளி ஆசிரியைகளாகவும் பணியாற்றி வருகின்றார்கள். சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த இவர்கள் பண்ணைகள் மற்றும் முன்பள்ளி ஆசிரிய பணிகளுக்கு அப்பால், இராணுவம் ஈடுபடுத்தப்படுகின்ற விசேட பணிகளான வெள்ள மீட்புப் பணிகள், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றிலும் இராணுவத்தால் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

அத்துடன் விசேட நிகழ்வுகளிலும், அவ்வப்போது அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற எதிர்ப்பு நடவடிக்கைகளிலும்கூட இவர்கள் பயன்படுத்தப்படுவதாக இந்த அறிக்கை தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டபோது கருத்து வெளியிட்டவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

### பண்ணைகளின் வருமானமும் பணியாளர்களின் நிலைமையும்

கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற பண்ணைகளில் 2016 ஆம் ஆண்டு ஒரு கோடியே 33 லட்சத்து 41 ஆயிரத்து 441 ரூபா 80 சதமும், முல்லைத்தீவு மாவட்டப் பண்ணைகளில் ஒரு கோடியே 58 லட்சத்து 24 ஆயிரத்து 661 ரூபா 55 சதமும் நிகர இலாபமாகப் பெறப்பட்டிருக்கின்றது. கடந்த ஆண்டுக்கான செயற்திட்ட அறிக்கையில் அந்தத் திணைக்களம் இந்தத் தகவல்களை வெளியிட்டிருக்கின்றது. இரண்டு மாவட்டங்களிலும் 2016 ஆம் ஆண்டு மாத்திரம் 2 கோடியே 91 லட்சத்து 66 ஆயிரத்து 103 ரூபா 35 சதம் (கிட்டத்தட்ட 190,000 அமெரிக்க டொலர்கள்) இலாபமாகப் பெறப்பட்டிருக்கின்றது என அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம் தனது அறிக்கையில் வெளிப்படுத்தியிருக்கின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




சிந்தனைக் குழாம்கள் மற்றும் பிரதான அரசியல் கட்சிகள் வெளியிட்ட ஆவணங்கள், ஜேர்மன் ஏகாதிபத்தியம் அதன் நலன்களை 'வலியுறுத்த' அது பயன்படுத்த உத்தேசிக்கும் அணுகுமுறை விதங்களை எடுத்துரைக்கின்றது. 'சமூக ஜனநாயக பாதுகாப்பு மற்றும் தற்காப்புக் கொள்கைக்கான கோட்பா



டுகள்' என்பதில் SPD எழுதுகிறது. நெருக்கடிகள், இணைய பாதுகாப்பு, மற்றும் நமது சொந்த மக்களின் பாதுகாப்பைக் கையாள சர்வதேச நிலைநிறுத்தல்களுக்கான அதிகரித்த கோரிக்கைகளுக்கு சமமாக, நம்மிடம் நடவடிக்கைக்குத் தகைமை கொண்ட நவீன ஆயுதப் படைகள் அவசியப்படுகின்றன. நமக்கு ஓர் இராணுவம் வேண்டும் அதில் நெருக்கடி நிலைமைகளுக்கு தயாராக நிலை நிறுத்தத் தக்க துருப்புகள் இருக்க வேண்டும். இதற்காக நாம் சிப்பாய்கள் மற்றும் தளவாடங்களுடன் இராணு வத்தைச் சிறப்பாக ஆயத்தப்படுத்த வேண்டியிருக்கும். என SPDஎழுதுகிறது.

## வொஷிங்டனின் போர் வாய்வீச்சு

வட கொரியாவுக்கு எதிராக டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது



உயர்மட்ட ஆலோசகர்களின் ஒரு தொடர் முடிவில்லாத ஆத்திரமூட்டல்களும் பொறுப்பற்ற அச்சுறுத்தல்களும் பேரழிவுகரமான மனித உயிரிழப்புகளுடன் உலகம் ஓர் அணு ஆயுதப் போர் விளிம்பிற்கு கொண்டு வரப்பட்டு வருகிறது என்ற அச்சங்களை உலகளவில் தூண்டிவிட்டுள்ளன.

''உலகம் இதுவரையில் பார்த்திராத ஆத்திரம் மற்றும் சீற்றத்தை'' கட்டவிழ்த்து விட அமெரிக்க ஜனாதிபதியின் சூளுரையைத் தொடர்ந்து அவரது தேசிய பாதுகாப்பு செயலர் தளபதி எச். ஆர். மெக்மாஸ்டரின் எச்சரிக்கை வந்தது. அவர் வடகொரியா ''அணு ஆயுதத்தைக் கொண்டு அமெரிக்காவை அச்சுறுத்துவதை'' நிறுத்துவதற்கு, வொஷிங்டன் - நூரெம்பேர்க் நாஜி போர் குற்ற வழக்குகளின்போது சட்டத்திலிருந்து தடைசெய்யப்பட்ட ஒரு கோட்பாடான- ஒரு முன்கூட்டிய போரைத் தொடுக்கத் தயாராக உள்ளதாக எச்சரித்தார்.

ட்ரம்பின் பாதுகாப்பு செயலர் போர் தளபதி ஜேம்ஸ் மாட்டிஸ் அண்மையில் அறிவிக்கையில், ஒரு நாட்டை, பெயரிட்டு கூறுவதானால் வடகொரியாவை, முற்றிலுமாக நிர்மூலமாக்க பென்டகன் வசம் பல வாய்ப்புகள் இருக்கின்றன என்றும், ட்ரம்ப்புக்கு அவை ஒவ்வொன்றையும் குறித்து விவரிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவித்தார்.

மிகச் சமீபத்தில், ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹேலே பாதுகாப்பு அவையில் அறிவிக்கையில், வட கொரிய தலைவர் கிம் ஜொங் யுன் போரை யாசித்துக் கொண்டிருக்கிறார்'' என்றார். இது பியொங்யாங் உடன் அமைதிப்படுத்தலை முயற்சிக்குமாறு கோரும் தென் கொரிய அரசாங்கம் மீதான ட்ரம்பின் எரிச்சலூட்டலுடன், பேச்சுக்கான நேரம் முடிந்துவிட்டது என்ற தொடர்ச்சியான அறிவிப்புகளோடு சேர்ந்து வருகின்றன.

> மிகவும் பலமாக முன்வரும் கேள்வி என்னவென்றால்: வொஷிங்டன் அதன் போர் வாய்வீச்சை நிரூபித்துக் காட்டுவதற்காகவே போருக்குள் இறங்குமா?

ஓர் அணுஆயுத மோதலைக் கட்ட



விழ்த்துவிடுவதற்கான இத்தகைய ஒவ்வொரு அச்சுறுத்தல்களும் அதிகரித்து கொண்டே செல்கின்ற நிலையில், அதிகரித்தளவில் மிகவும் பலமாக முன்வரும் கேள்வி என்னவென்றால்: வொஷிங்டன் அதன் போர் வாய்வீச்சை நிரூபித்துக் காட்டுவதற்காகவே போருக்குள் இறங்குமா? இந்த அச்சுறுத்தல்கள் -வெறும் உளறல்கள் இல்லை தீர்மானகரமானவை என்பதை நிரூபிப்பதற்காக- இவை ஒரு சாத்தியமான அணுஆயுதப் போரை நோக்கிய போக்கில் ஓர் உந்து சக்தியாக மாறி உள்ளதா?

இது, ட்ரம்ப் நிர்வாகம், அமெரிக்க இராணுவ உயர் கட்டளையகம், அரச எந்திரத்தின் சக்தி வாய்ந்த பிரிவுகள் மற்றும் ஒபாமா நிர்வாகத்தின் கீழ் அமெரிக்க ஆளும் செல்வந்த குழுக்களுக்குள் ஒரு நம்பிக்கைக்குரிய



ஷரத்தாக உள்ளது.

சிரியாவுக்கு எதிரான அமெரிக்க போரில் ஒபாமா அவரின் சிவப்பு கோட்டை நிரூபித்துக் காட்டத் தவறியதால் சூழப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக அரங்கில் அதன் நம்பகத்தன்மையை இழந்து நிற்கிறது.

இந்த இழப்பை மாற்றுவதற்காக, வொஷிங்டன் கொரிய தீபகற்பத்தின் மீது ஓர் அப்பட்டமான பித்துபிடித்த இராணுவ வாய்ப்பை ஒருவேளை தேர்ந்தெடுக்கலாம்.

அதாவது இது அமெரிக்க ஆளும் வட்டாரங்களுக்குள் ஒரு நிஜமான மற்றும் இப்போதைய அபாயமாக உணரப்படுகிறது என்பதை அண்மையில் வோல் ஸ்ட்ரீட் வர்த்தகம் தொடங்கிய போது பங்கு விலைகளில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியிலும் மற்றும் அண்மித்த ஓராண்டில் தங்கத்தின் விலை அதன் உயர்ந்த மட்டங்களுக்கு உயர்ந்ததன் அடிப்படையிலும் தவறுக்கிடமின்றி வெளிப்பாட்டைக் கண்டது.

இந்த போர் அச்சுறுத்தலானது, வெள்ளை மாளிகையில் உள்ள பாசிசவாத பில்லியனரின் வீராவேச ஆத்திரமூட்டும் ட்வீட் செய்திகளின் வெறும் நடவடிக்கை அல்ல. அங்கே போர் முனைவுக்கு எந்தவொரு ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் எதிர்ப்பும் இல்லை. ஜனநாயகக் கட்சியின் முன்னணி பிரபலங்கள் அதற்கு எதிராக ஏதாவது பேசி உள்ளார்களா? கொரிய தீபகற்பத்தில் ஏற்படும் முற்று-முதலான போரின் விளைவுகளைக் கருதிப் பார்க்க ஏதேனும் பொது விசாரணைகள் கூட்டப்பட்டுள்ளனவா?

போர் பிரசாரத்தின் சலாம் போடும் ஒரு கருவியாக பெருநிறுவன ஊடகங்களோ, அந்த மோதலில் எந்த பரந்த வரலாற்று அல்லது புவிசார் அரசியல் உள்ளடக்கமும் இல்லாததைப் போலவும், வடகொரியாவின் சமீபத்திய ஏவுகணை வீச்சு அல்லது குண்டு பரிசோதனைக்கு முன்னர் நடந்த எதனோடும் சம்பந்தப்படுத்தாமலும் அதை கையாள்கின்றன.

65 ஆண்டுகளுக்கு முந்தைய அமெரிக்க போரில் சுமார் 30 லட்சம் கொரியர்கள் கொல்லப்பட்டனர்.

(கேள்வி தொடரும்)





# சுதந்திர வேட்கை

அத்தியாயம் - VII

## யாழ்ப்பாணக் கோட்டைச் சமர்

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சிறிலங்கா அரசிற்கும் மத்தியில் மீண்டும் போர் மூண்டதையடுத்து சமாதானத்திலும் சமரசப்பேச்சிலும் காட்டப்பட்ட முக்கியத்துவம் இப்போது விடுதலைப் போரில் திரும்பியது. இதனால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை மீட்டெடுக்கும் தந்திரோபாயம் முதலிடத்தைப் பெற்றது. பிரபாகரனின் ஆய்வில், யாழ்ப்பாணத்தின் இதயத்தில் அமைந்திருந்த கோட்டை இராணுவத் தளம் விடுதலைப் புலிகளின் நிர்வாக ஆட்சிக்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்தது. யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பை நோக்காகக் கொண்டு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட இந்தக் கோட்டை, யாழ்ப்பாணத்திற்கு வடகரையோரமாக, பண்ணைப் பாலத்திற்கு அருகில் அமையப்பெற்றிருக்கின்றது.

கோட்டைப் படைத்தளம் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்ததுமட்டுமன்றி, யாழ்ப்பாண நகரில் வாழ்ந்த மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தலாக இருந்தது. இந்தக் கோட்டை முகாமில் குடியிருந்த சிங்கள இராணுவத்தினர் கண்மூடித்தனமாக மோட்டார் எறிகணைத் தாக்குதல்களை நடத்தி பொதுமக்கள் மத்தியில் உயிர்ச் சேதங்களை விளைவித்து வந்தனர். கோட்டைக்கு அருகிலுள்ள யாழ்ப்பாண மருத்துவமனையும் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி வந்தது.

இந்தத் தாக்குதல்கள் நிகழும்போது பீதியடைந்த நோயாளரும், மருத்துவமனை ஊழியரும் பாதுகாப்புத் தேடி மருத்துவமனையிலிருந்து வெளியேறினர். இது மாத்திரமன்றி, இந்தக் கோட்டை குறிப்பிடத்தக்க ஓர் அரசியல் குறியீடாகவும் விளங்கியது. ஒல்லாந்தரின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட இந்தக் கோட்டை, தமிழர் தாயகம் மீதான அந்நிய ஆதிக்கத்தைக் குறிக்கும் ஒரு சின்னமாகவும் இருந்து வந்தது. சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை, யாழ்ப்பாணம் மீதும் அங்குவாழும் மக்கள் மீதும் சிங்களத்தின் இறையாண்மையைக் குறிக்கும் சின்னமாகவே கோட்டை விளங்கியது.

எனவே, கோட்டைத் தளத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்கான இராணுவ நலனும் அரசியல் நோக்கமும் விடுதலைப் புலிகளுக்கு இருக்கவே செய்தது. அந்த இலக்கை அடைவதில் அவர்கள் மிகவும் உறுதியாக இருந்தார்கள். ஆயினும், கோட்டைத் தளம் மீது நேரடியான வலிந்து தாக்குதலை நடத்துவதென்பது தற்கொலைக்கு ஒப்பானது.

ஏனென்றால், ஆழமான அகழிகளால் சூழப்பட்ட இந்தக் கோட்டை, எவரும் உள்ளே ஊடுருவ முடியாத பலம் பொருந்திய பாதுகாப்புக் கட்டமைப்பாக விளங்கியது. ஆகவேதான் கோட்டைத் தளத்தைச் சுற்றி முற்றுகையிட பிரபாகரன் முடிவெடுத்தார். முழுமையான போர் மூண்டு ஒருவார காலத்தின் பின்பு, 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி கோட்டை மீதான முற்றுகைச் சமர் தொடங்கியது. விடுதலைப் புலிகளின் படையணிகள் கோட்டையைச் சூழ, பலம் பொருந்திய பாதுகாப்பு அரண்களை அமைத்து, முற்றுகையை இறுக்கின. அதனைத் தொடர்ந்து கோட்டைத் தளத்துக்குள் மோட்டார் எறிகணைகளும் ஏவப்பட்டன.

கோட்டைப் படைத்தளம் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்ததுமட்டுமன்றி, யாழ்ப்பாண நகரில் வாழ்ந்த மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தலாக இருந்தது. இந்தக் கோட்டை முகாமில் குடியிருந்த சிங்கள இராணுவத்தினர் கண்மூடித்தனமாக மோட்டார் எறிகணைத் தாக்குதல்களை நடத்தி பொதுமக்கள் மத்தியில் உயிர்ச் சேதங்களை விளைவித்து வந்தனர். கோட்டைக்கு அருகிலுள்ள யாழ்ப்பாண மருத்துவமனையும் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி வந்தது. இந்தத் தாக்குதல்கள் நிகழும்போது பீதியடைந்த நோயாளரும், மருத்துவ மனை ஊழியரும் பாதுகாப்புத் தேடி மருத்துவமனையிலிருந்து வெளியேறினர். இது மாத்திரமன்றி, இந்தக் கோட்டை குறிப்பிடத்தக்க ஓர் அரசியல் குறியீடாகவும் விளங்கியது. ஒல்லாந்தரின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட இந்தக் கோட்டை, தமிழர் தாயகம் மீதான அந்நிய ஆதிக்கத்தைக் குறிக்கும் ஒரு சின்னமாகவும் இருந்து வந்தது.

முற்றுகையிடப்பட்டிருந்த சிங்களப் படையினருக்கு, ஹெலிக்கொப்டர்கள் மூலமாக விநியோகம் நடைபெறுவதைத் தடுக்கும் நோக்கில் 50 கலிபர் துப்பாக்கிகளையும் விடுதலைப் புலிகள், கோட்டைக்கு அருகில் நகர்த்தினர்.

இறுக்கமான முற்றுகைக்கு ஆளாகி, விநியோகம் துண்டிக்கப்பட்ட நிலையில், தொடர்ச்சியான மோட்டார் எறிகணைத் தாக்குதல்களுக்கும் ஆளாகிய சிங்களப் படையினர், பயங்கரமான உளவியல் நெருக்குவாரத்துக்கு இலக்காகினர்.கோட்டைத் தளம் விடுதலைப் புலிகளிடம் விழுவதை எப்படியாவது தடுக்கவேண்டும் என்று உறுதிபூண்டு நின்ற பிரேமதாசா, யாழ்ப்பாணம் மீது மிகக் கொடூரமான குண்டு வீச்சைக் கட்டவிழ்த்துவிட்டார். சிறிலங்கா விமானப் படையினர் வசமிருந்த சகல விதமான குண்டுவீச்சு விமானங்களும், இயந்திரத்துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களும் அணிதிரட்டப்பட்டு இரவு, பகல் எனக் குண்டுமழை பொழியப்பட்டது. போதாக்குறைக்கு பலாலித் தளத்திலிருந்து பீரங்கி எறிகணைத் தாக்குதல்களும் தீவிரப்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில், கோட்டையை அண்டிய புலிகளின் நிலைகள் மீது நிகழ்த்தப்பட்ட விமான, பீரங்கிக் குண்டு வீச்சுக்கள் படிப்படியாக யாழ்ப்பாண நகரின் குடியிருப்புப் பகுதிகள் மீது விஸ்தரிக்கப்பட்டன. இந்தக் கண் மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்களும் விமானக் குண்டு வீச்சுக்களும் யாழ்ப்பாண மக்கள் மீது பெரிய அளவில் உயிர்ச் சேதத்தை விளைவித்ததோடு, ஆயிரக்கணக்கான வீடுகளையும் நாசப்படுத்தின. குண்டுத் தாக்குதல்களிலிருந்து தப்பிப் பிழைப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்தனர்.

இடம்பெயர விரும்பாத மக்கள் தமது இருப்பிடங்களில் பதுங்கு குழிகள் அமைத்து, தினமும் அவற்றுக்குள் பலமணிநேரத்தைக் கழித்தனர். கோட்டையிலிருந்து ஒரு சில மைல்கள் தொலைவிலிருந்த அத்தியடியில் நாம் அப்பொழுது வசித்து வந்தோம். அந்தச் சொற்ப காலம் மிகவும் பயங்கரமானது. அந்தப் பகுதியில், இரவு, பகலாக ஹெலிக்கொப்டர்கள், இயந்திரத் துப்பாக்கிகள் தாக்குதலை நிகழ்த்தின.

விமானக்குண்டுவீச்சு தொடர்ச்சியாக நடைபெற்றது. எந்த நேரத்திலும் எமது வீடு மீது குண்டு வீசப்படலாமென நாம் தினமும் அங்கலாய்த்தபடி இருந்தோம். அப்பொழுது யாழ்ப்பாணத் தளபதியாகப் பணிபுரிந்த பானு, எமது வீட்டுக்கு வருகை தந்து எம்மை அங்கிருந்து உடனடியாக வெளியேறும்படி எச்சரித்தார்.

உள்ளூர் உளவாளிகளின் மூலமாக எமது இருப்பிடத்தின் விவரங்களை சிங்கள விமானப் படையினர் பெற்றிருக்கின்றனர் எனப் புலிகளின் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது எனப் பானு சொன்னார். தளபதி பானுவின் ஆலோசனைக்கு அமைய நாம் எமது அத்தியடி வீட்டிலிருந்து உடனே வெளியேறி வடமராட்சியிலுள்ள வதிரியில் குடியமர்ந்தோம். ஒரு சில நாள்களின் பின்பு, விமானத்தில் இருந்து வீசப்பட்ட பீப்பாய்க் குண்டு ஒன்று எமது அத்தியடி வீடு மீது விழுந்து வீட்டைத் தரைமட்டம் ஆக்கியதாக அறிந்தோம்.

கோட்டை முற்றுகைச் சமர் 107 நாள்கள் வரை நீடித்தது. இறுதியில் செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி, திலீபனின் நினைவு நாளன்று யாழ்ப்பாணக் கோட்டை விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ந்தது. கோட்டைத் தளத்துக்கு விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டதால் அங்கு முடங்கிக்கிடந்த படையினர் பசியால் செத்து மடியும் பயங்கர நிலைக்குத் தள்ளப்பட்டனர். இறுதியில் கோட்டைக்குப் பின்புறமாக அமைந்திருந்த நிலவறை ஊடாக பண்ணைக் கடல் வழியாக இந்தப் படையினர் மீட்டெடுக்கப்பட்டனர்.

(தொடரும்...)

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



106



# சமூக வாழ்க்கையில் ஆழ ஊடுருவியுள்ள இராணுவம்

# பொறியில் சிக்கிய நிலைமை



(09 ஆம் பக்கத் தொடர்ச்சி... )

பண்ணைத் தொழில் செய்பவர்களுக்கும், முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் மாதாந்தம் 30 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட்ட போதிலும், அது அவர்களுடைய குடும்பங்களின் ஏனைய தேவைகளுக்குப் போதாத நிலையே நிலவுகின்றது.

மீள்குடியேற்றப் பிரதேசங்களுக்குப் படையெடுத்துள்ள நிதி நிறுவனங்களின் நுண்நிதி கருத்திட்டச் செயற்பாட்டின் கடன் திட்டங்களுக்கு இந்தப் பண்ணைத் தொழிலாளர்களும், முன்பள்ளி ஆசிரியைகளும்கூடப் பலியாகிப் போயிருக்கின்றார்கள். அந்த நிறுவனங்களின் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் கருத்தைக் கவரும் வரையிலான ஆசை வார்த்தைகளில் மயங்கி பல்வேறு பொருள்களை இவர்கள் கொள்வனவு செய்தமையால் வீணான கடன் சுமைக்கும் இவர்கள் ஆளாகியிருக்கின்றார்கள்.

இதனால் குடும்பத்தில் ஒருவருடைய வருமானத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு குடும்பச் செலவையும் பிள்ளைகளின் கல்வி மற்றும் கடன் தவணைகளுக்கான பணக் கொடுப்பனவுகளையும் சமாளிக்க முடியாமல் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்கள். காலையில் இருந்து மாலை 5 மணிவரையில் அவர்கள் பணியாற்ற வேண்டியிருப்பதால் வேறு வருமானம் ஈட்டக்கூடிய வேலைகளுக்குச் செல்ல முடியாதிருப்பதாக அவர்கள் கவலை வெளியிட்டிருக்கின்றார்கள்.

### ஏளனமாக நோக்கப்படும் முன்பள்ளி ஆசிரியைகள்

அத்துடன், அவர்கள் இராணுவத்தினரால் நடத்தப்படுகின்ற பண்ணைகளில் பணியாற்றுவதால், சமூகத்தில் இராணுவத்திற்காக வேலை செய்பவர்கள் என்ற அடையாளப்படுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.

அதேபோன்று சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் சம்பளத்தில் பணியாற்றுகின்ற முன்பள்ளி ஆசிரியைகளும் ஏளனமாகச் சமூகத்தில் நோக்கப்படுகிறார்கள். அத்துடன், பாடசாலைகளின் நிகழ்வுகளில் அடிக்கடி இராணுவத்தினர் பங்குபற்றுகின்றனர். அத்துடன், அங்கு வந்து செல்வதால், அவர்களுடைய நடத்தைகள் தொடர்பாகவும் சமூகத்தில் கீழ்ப்பார்வையுடன் கூடிய கருத்து நிலவுகின்றது.

இதனால் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றுபவர்கள் சமூகத்தின் ஓர் அங்கமாக ஒருங்கிணைந்து வாழமுடியாமல் தனிமைப் படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் அரசியல் செயற்பாடுகளிலோ அல்லது சமூகச் செயற்பாடுகளிலோ இணைந்து செயலாற்றவோ பங்களிப்புச் செய்யவோ முடியாத நிலைமையும் காணப்படுகின்றமையால், இவர்கள் சார்ந்த சமூகம் தனக்குள்ளேயே பிளவுபட்ட ஒரு சமூகமாகத் திகழ்கின்றது.

இங்கு கருத்துச் சுதந்திரத்திற்கும் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கும் இடமில்லாமல் போயிருக்கின்றது. சிவில் பாதுகாப்புத் திணைக்கள வேலையை விட்டு வேறு தொழில் வாய்ப்புகளைத் தேடிச் செல்வதற்கு இவர்களால் முடியாதிருக்கின்றது.

தொடர்ச்சியான இராணுவ அதிகாரிகளின் கண்காணிப்பு, அவர்களால் நடத்தப்படுகின்ற மாதாந்த கருத்தரங்குகள், சந்திப்புகளில் கலந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் என்பவற்றாலும், மாதாந்தம் பண்ணைகளுக்கு விஜயம் செய்து இவர்களை நோட்டமிடுகின்ற புலனாய்வுத்துறை அதிகாரிகளின் கண்காணிப்புச் செயற்பாடு போன்றவை காரணமாக இவர்கள் சிவில் பாதுகாப்புத் திணைக்கள வேலையை விட்டுச்செல்ல முடியாதவர்களாக -பொறியொன்றில் சிக்கிய நிலைமைக்கு ஆளாகியிருக்கின்றார்கள்.



இந்த நிலைமை நீடிக்குமேயானால், சுதந்திரமும், ஜனநாயக உரிமைகளும் பறிக்கப்பட்ட ஒரு சமூகமாகவே எதிர்காலத்தில் வன்னிப் பிரதேச சமூகம் மாற்றமடையும் என்று 'அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்' தனது அறிக்கையில் எச்சரிக்கை செய்திருக்கின்றது,

### அரசுக்கும் சர்வதேசத்திற்கும் அழைப்பு

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றுபவர்களின் ஊடாக இராணுவத்தைச் சென்றடைகின்ற இலாப நிதி உள்ளூரின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இந்தப் பண்ணைகளும் அவற்றில் பணியாற்றுபவர்களையும் வடமாகாண சபை பொறுப்பேற்று கூட்டுறவுச் சபைச் செயற்பாட்டுக்குள் உள்ளடக்க வேண்டும் என்று அந்த அறிக்கை பரிந்துரைத்திருக்கின்றது.

இந்த விடயத்தில் அரசியல்வாதிகளும் உரிய கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பண்ணைகளிலும், முன் பள்ளிகளிலும் பணியாற்றுபவர்களின் வாழ்வாதாரத்திற்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருக்கின்றது.

அரசாங்கம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்து இந்தப் பண்ணைகளை விடுவிக்க வேண்டும் என்பதுடன், அங்கு பணியாற்றுபவர்களின் மனித உரிமைகள் பேணப்படுவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் மாதம் ஒருமுறை அங்கு விஜயம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 30L1 மற்றும் 34L1 தீர்மானங்களில் 'அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்' வெளியிட்டுள்ள அறிக்கையின் பரிந்துரைகளையும் உள்ளடக்கி அவற்றை



நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கத்திற்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என அந்த அறிக்கை கோரியிருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்களாகியுள்ள நிலையில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்ற காரணத்திற்காக இராணுவத்தின் புனர்வாழ்வுப் பயிற்சி பெற்றதன் பின்னர், சமூகத்தில் சாதாரண வாழ்க்கை வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை அரசாங்கம் இராணுவத்தின் ஊடாக அடக்குமுறைக்கு உள்ளாக்கக் கூடாது.

அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை மனதில் இருத்தி, அவர்களும் சாதாரண சிவில் வாழ்க்கையை சுதந்திரமும் ஜனநாயக உரிமைகளையும் கொண்டவர்களாக வாழ்வதற்கு வழி செய்ய வேண்டும்.

புனர்வாழ்வுப் பயிற்சியின் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டபோது, இந்த நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் செயற்பாடுகளில் அவர்கள் பங்களிக்க வேண்டும் என்றும், அதன் ஊடாக இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகச் செயற்படவேண்டும் என்றும் அதற்கான உரிமைகளும் சுதந்திரமும் அவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறியதை அரசாங்கம் நினைவுபடுத்திச் செயற்பட முன்வர வேண்டும். ★

# ரஷ்யப் போர்க் கப்பலை வாங்குகிறது இலங்கை!

ரஷ்யாவிடம் இருந்து இலங்கை கடற்படைக்காக, 158.5 மில்லியன் டொலர் பெறுமதியான ஜிபார்ட் 5.1 (Gepard 5.1) ரகத்தைச் சேர்ந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இந்தக் கொள்வனவு தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு, ரஷ்யா வழங்கிய 300 மில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ், இந்த போர்க் கப்பல் கொள்வனவு செய்யப்படவுள்ளது.




இந்தக் கடன் திட்டத்தில் 165 மில்லியன் டொலர் பயன்படுத்தப்பட்டு விட்ட நிலையில், 2015 வரை பயன்படுத்தப்படாதிருந்த 136 மில்லியன் டொலர் கடன் திட்டம் காலாவதியாகி விட்டது என்று ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்திருந்தார்.

எனினும், 135 மில்லியன் டொலர் கடன் திட்டத்துக்கான கால எல்லையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்க ரஷ்யா விரும்பம் தெரிவித்துள்ளது என்றும் ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் அரச இராணுவ உற்பத்தி ஏற்றுமதியாளரான Rosoboron export நிறுவனத்திடம் இருந்து ஜிபார்ட் போர்க் கப்பலை வாங்குவதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளது.

இந்தக் கப்பலில் படையினருக்குப் பயிற்சி அளிப்பதற்கு மேலதிகமாக 7 மில்லியன் டொலரை இலங்கை செலவிட நேரிடும்.

இதுபோன்றதொரு போர்க் கப்பல் தேவை என்று இலங்கைக் கடற்படை கோரியிருந்தது. இதனைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தப் போர்க்கப்பலில் பொருத்தப்படும் ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களை உள்ளடக்கியதாக, கப்பலுக்கான மொத்த செலவு 158.5 மில்லியன் டொலராகும். இதில், 135 மில்லியன் டொலர் ரஷ்ய கடனுதவியுடன் இலங்கை அரசின் 15 வீத பங்களிப்பும் இருக்கும்.

ரஷ்யாவிடம் பெறப்படும் கடனை ஐந்து ஆண்டு விலக்குடன், 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசமைப்புக்கு எதிராக அரசு செயற்படுகிறது!

### மஹிந்த அணி கூறுகிறது



கொழும்பு , செப். 25

அரசு தொடர்ந்தும் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயற்பட்டு வருகிறது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மஹிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஷேஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை அரசாங்கம் அரசமைப்புச் சட்டத்திற்கு முரணாக நிறைவேற்றிக் கொண்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே தேர்தலை ஒத்திவைக்கும் எந்தச் சதித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விருப்புவாக்கு முறைக்குப் பதிலாகத் தொகுதி மற்றும் விகிதாசார முறை கலந்த தேர்தலை நடத்துவதற்காகவே அரசு மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தைக் கொண்டுவந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, பதவிக்காலம் முடியும் மாகாண சபைகளின் நிர்வாகத்தை ஆளுநர்களின் கீழ் கொண்டு வருவது ஜனநாயக ரீதியானசெயற்பாடு அல்ல எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

## ஆணழகனானார் கண் மருத்துவர்!



கொழும்பு, செப். 25

கண்டி அரசாங்க வைத்தியசாலையில் கண் மருத்துவராகச் சேவையாற்றி வரும் மருத்துவர் பண்டுல பஸ்நாயக்க, மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 43 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் ஆணழகன் போட்டியில் முதன்மை வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கண்டியில் வசித்து வரும் மருத்துவர் பண்டுல பஸ்நாயக்க, ஆயிரக்கணக்கானவர்களுக்கு கண் தொடர்பான சிகிச்சைகளை அளித்துள்ள போதிலும், அவரது உடலமைப்புக் காரணமாகவே பரவலாகப் பேசப்பட்டு வந்துள்ளார்.

உடற்பயிற்சி மூலம் கட்டுமஸ்தான உடலமைப்பைத் தான் ஏற்படுத்திக்கொண்டார் என அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக மருத்துவர் பண்டுல பஸ்நாயக்க தெரிவித்தவை வருமாறு:-

தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துகளைப் பயன்படுத்தாது உடற்பயிற்சிகளைச் செய்ய இளம் தலைமுறையினரை ஊக்கப்படுத்த எண்ணியுள்ளேன்.

மேலும், உடலமைப்பை நேசிப்போரின் பாராட்டுக்கள் தனது மனதுக்குப் பெரும் மகிழ்ச்சி தருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

மருத்துவர் பண்டுல பஸ்நாயக்கவின் புகைப் படங்கள் சமூக வலைத்தளங்களிலும் பகிரப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆன்மீகச் சுற்றுலா செல்லும் முதியோர் இல்லத்தவர்கள்

கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை ஆன்மீகச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தச் சுற்றுலாவின் போது மன்னார் மடுமாதா, திருக்கேதீஸ்வரம் போன்ற ஆலயங்களுக்கு இவர்கள் செல்லவுள்ளனர்.

இல்லத்தைச் சேர்ந்த 40 வரையான முதியவர்கள் இந்தச் சுற்றுலாவுக்காக அழைத்துச் செல்லப்படுவர் என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். சுற்றுலாவின் போது முல்லைத்தீவைச் சேர்ந்த முதியோர் சங்கங்களின் பிரதிநிதிகளும் அழைத்துச் செல்லப்படுவர்.

இந்த இரு ஆலயங்களுக்கும் அழைத்துச் செல்லப்படும் முதியவர்கள் அங்கு ஆன்மீக வழிபாட்டிலும் ஈடுபடுவார்கள்.

இதேசமயம், கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இல்லத்தின் முதியவர்கள் ஆன்மீகச் சுற்றுலாவாக வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்துக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். (இ)

## 30 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை!




கொழும்பு, செப். 25

உள்நாட்டு அரிசித் தேவையை பூர்த்திசெய்யும் பொருட்டு விரைவில் 30 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவிருக்கிறது என்று சதோச தலைவர் ரி.எம்.கே.பீ. தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு அரிசியின் விலையையும்விட இறக்குமதி செய்யப்படும் அரிசியின் விலை குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக அரச மற்றும் தனியார் துறை வர்த்தக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும், லங்கா சதோச விற்பனை நிலையங்களில் அரிசியின் விலை, தனியார் நிறுவனங்களின் விலை மட்டத்தையும் விடக் குறைந்த அளவில் காணப்படுவதாக சதோச விற்பனை நிலையங்களில் 75 ரூபாவுக்கும் 85 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலை மட்டங்களில் அரிசி விற்பனை செய்யப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சதோச நிறுவனத்திற்கு மேலதிகமாகத் தனியார்துறைக்கும் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரிசியின் கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து சில தனியார் வர்த்தகர்கள் அரிசியின் விலையை அதிகரித்துள்ளனர்.

நாளாந்தம் ஆறாயிரத்து 500 மெற்றிக்தொன் அரிசி தேவைப்படுகிறது என அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ஹேமந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதில் 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி உள்நாட்டு அரிசியாகும். - என்று தெரிவித்துள்ளார்.

# முடிவுகள் எடுக்க ஓ.பி.எஸுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை?

## இரு அணிகளுக்கிடையே நீடிக்கும் பனிப்போர்

சென்னை,செப்.25

அ.தி.மு.கவில் இரு அணிகளும் இணைந்த பின்னரும் முக்கிய முடிவுகள் எடுக்க ஓ. பன்னீர்செல்வத்துக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. (அம்மா) அணியும், ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான புரட்சித் தலைவி அம்மா அணியும் கடந்த மாதம் 21 ஆம் திகதி இணைந்தன. இதையடுத்து ஓ.பன்னீர்ச்செல்வத்துக்குத் துணை முதலமைச்சர் பதவியும் அவர் அணியைச் சேர்ந்த மாபா.பாண்டியராஜனுக்கு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டன.



சமீபத்தில் ஒன்றுபட்ட அ.தி.மு.கவின் பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடந்தது. அதில் 98 சதவீத நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் கட்சியை வழி நடத்துவதற்குப் பொதுச்செயலாளர் பதவியை ரத்து செய்து விட்டு, புதிதாக ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற இரண்டு பதவிகளை உருவாக்கித் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும் தேர்ந்து எடுக்கப்பட்டனர். இதன் மூலம் இரு அணியைச் சேர்ந்தவர்களுக்குப் பதவிகளும், பொறுப்புக்களும் சரிசமமாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன எனக் கூறப்பட்டது. ஆனால், உண்மையில் ஆட்சியிலும், கட்சி விவகாரங்களிலும் ஓ.பன்னீர்செல்வத்துக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் முழுமையான அதிகாரங்கள் எவையும் வழங்கப்படவில்லை என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

இரு அணிகளும் இணைந்ததுமே துணை முதலமைச்சராகப் பதவியேற்ற ஓ.பன்னீர்செல்வம் தனது துறைகளுக்கு, தனக்குப் பிடித்த சில அதிகாரிகளைத் தேர்வுசெய்ய விரும்பினார். ஆனால், அவரது முதல் கோரிக்கையையே எடப்பாடி அதிரடியாக நிராகரித்து விட்டார்.

அதன்பிறகு துணை முதல்வர் என்ற அந்தஸ்தில் கோப்புக்களைப் பார்த்து, துறை ரீதியிலான சில முடிவுகளை ஓ.பன்னீர்செல்வம் எடுத்தார். ஆனால், அவற்றையும் எடப்பாடி பழனிச்சாமி ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(ப)

## டில்லியில் தமிழக விவசாயிகள் 70ஆவது நாளாக போராட்டம்



புதுடில்லி,செப்.25

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பது உட்படப் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தித் தமிழக விவசாயிகள் டில்லி ஜந்தர் மந்தரில் நேற்றுமுன்தினம் 70 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையொட்டி பிரதமர் மோடி, விவசாயிகளின் கஷ்டத்தை உணராமல் அவர்களது தோளில் ஏறி குதிரைச் சவாரி செய்கின்றமை போன்று நாடகம் நடத்தினார்கள்.

மோடி போன்று உடை, முகமூடி அணிந்த ஒருவரை மற்றொரு விவசாயி தனது தோளில் சுமக்க, பிற விவசாயிகள் கோஷமிட்டவாறு ஊர்வலமாகச் சென்று போராட்டம் நடத்தினர்.

## கின்னஸ் சாதனை படைக்கும் 101 அடி அம்மன் மூங்கில் சிலை

அசாம் மாநிலம் கவுகாத்தியில் நவராத்திரி பூஜையை ஒட்டி செய்யப்பட்ட 101 அடி துர்க்கை அம்மன் சிலை உலகிலேயே மிகப்பெரிய மூங்கில் சிலை என கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற உள்ளது.

அசாம் மாநிலத்தில் துர்க்கா பூஜை விழா மிகவும் பிரசித்தி பெற்றது. ஒவ்வோர் ஆண்டும் வெகு விமரிசையாக நடக்கும் இந்த விழாவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

அந்த மாநிலத்தின் கவுகாத்தி நகரில் துர்க்கா பூஜைக்காக 101 அடியில் துர்க்கை அம்மன் சிலை மூங்கிலால் செய்யப்பட்டுள்ளது. அதனைப் புகழ்பெற்ற கலை இயக்குநர் நூருதின் அக்மத் தலைமையிலான 44 கலைஞர்கள் கொண்ட குழு வடிவமைத்தது. ஆரம்பத்தில் 110 அடி உயரத்தில் செய்ய



திட்டமிடப்பட்டு, ஓகஸ்ட் மாதம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், இடையில் ஏற்பட்ட கடுமையான புயலால் சிலைக்குச் சேதம் ஏற்பட்டது. பாதி வேலைப்பாடுகள் முடிவடைந்த நிலையில் மீண்டும் அதனை ஆரம்பத்தில் இருந்து வடிவமைத்தமை குறிப்பிடத்தக்கது.

## ரோஹிங்கியா அகதிகளுக்கு 700 தொன் உதவிப்பொருள்கள்

புதுடில்லி,செப்.25

பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கியா அகதிகளுக்கு 700 தொன் உதவிப்பொருள்களை இந்திய அரசு கப்பல் மூலம் அனுப்பி வைத்துள்ளது.

மியன்மாரில் ராக்கின் மாகாணத்தில் ரோகிங்கியா முஸ்லிம்களுக்கு எதிராகக் கலவரம் வெடித்தது. அதனால் இராணுவத்துக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இதனால் பலர் உயிரிழந்தனர்; வீடுகள் தீவைத்து எரிக்கப்பட்டன.



இதனால் அகதிகளாக வெளியேறிய 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அண்டை நாடான பங்களாதேஷில் தஞ்சம் அடைந்துள்ளனர். இந்த மக்களுக்குப் பங்களாதேஷ் அரசு உணவு, உடை உள்ளிட்ட உதவிகளை வழங்கிவருகிறது. இருப்பினும் அதிக அளவிலான மக்கள் அகதிகளாக அங்கு இருக்கின்றமையால் அனைவருக்கும் உதவிகள் வழங்குவதில் அந்நாட்டிற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கியா அகதிகளுக்கு நிவாரணப் பொருள்களை இந்தியா அனுப்பி உள்ளது. பங்களாதேஷிற்கு 700 தொன் நிவாரணப் பொருள்களை இந்தியா அனுப்பியுள்ளது. 62 ஆயிரம் பேருக்கு உடை, நுளம்புவலை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# ஈராக்கின் சலாகுதீனில் தாக்குதல்; 200 ஐ.எஸ். தீவிரவாதிகள் சாவு!





பக்தாத்,செப்.25

ஈராக்கில் சலாகுதீனில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே நிகழ்ந்த தாக்குதலின் முடிவில் 200 இற்கும் மேற்பட்டோர் கொன்றுகுவிக்கப் பட்டுள்ளனர் என லெப்டினன்ட் ஜெனரல் ஷாகீர் ஜாவ் தத் அறிவித்துள்ளார்.

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் பிடி, கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து வருகின்றது. இந்த நிலையில், அங்குள்ள சலாகுதீன் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் அந்த நாட்டின் இராணுவம் ஈடுபட்டது.

கடும் தாக்குதல்கள் கடந்த புதன்கிழமை முதல் தொடுத்து நடைபெற்று வந்தன. இந்தத் தாக்குதல்களின்முடிவில்ஐ.எஸ். தீவிரவாதிகள் 200இற்கும் மேற்பட்டோர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர் என லெப்டினன்ட் ஜெனரல் ஷாகீர் ஜாவ் தத் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: சலாகுதீன் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து 480 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை இராணுவம் மீட்டுள்ளது. 41 கிராமங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவர்களின் ஆயுத தளவாடங்களும் அழிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே கிர்குக் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு ஈராக் படைகள் நேற்றுமுன்தினம் புதிய தாக்குதல்களைத் தொடங்கி உள்ளன. இதுபற்றி இராணுவ நடவடிக்கைகள் கமாண்டர் அப்துல் அமீர் யாரல்லா கூறியவை வருமாறு:-

அஜ்ஜாவியா, அல் நாமல் ஆகிய பிராந்தியங்களில் பதுங்கியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளைக் குறிவைத்துப் புதிய தாக்குதல்கள் தொடங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். (ப)

## ட்ரம்ப் மகள் போன்று மாற முகமாற்று சத்திர சிகிச்சை

### ஆர்வம் காட்டும் அமெ.பெண்கள்



நியூயோர்க்.செப்.25

அமெரிக்க அதிபர் ரொனால்ட் ட்ரம்ப் மகள் இவாங்கா போன்று மாற முகம் மாற்று சத்திர சிகிச்சைக்குப் பெண்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அமெரிக்க அதிபர் ரொனால்ட் ட்ரம்ப் மகள் இவாங்கா டிரம்ப். ட்ரம்பின் அரசியல் ஆலோசகராக இருக்கின்றார்.

அதிபர் மகள் என்பது மட்டும் இவரது சிறப்பு அம்சம் அல்ல. தன்னம்பிக்கை மிக்கவர். திறமையாக எதையும் துணிச்சலுடன் சமாளிக்கக் கூடிய அழகான பெண். அமெரிக்க குடிமகன்களில் முதல் குடும்பத்துப் பெண்மணி ஆவார். எனவே இவரைப் போன்று அழகான முக அமைப்புடன் திகழ அமெரிக்க பெண்களில் பலர் விரும்புகின்றனர். அதற்காக இவாங்கா ட்ரம்ப் போன்று மாற முகமாற்று சத்திர சிகிச்சை செய்து கொள்கின்றனர்.

அதற்காக நியூயோர்க்கில் உள்ள பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர் நார் மன்ரோ என்பவரை நாடுகின்றனர். 50 இற்கும் மேற்பட்ட பெண்கள் இவாங்கா போட்டோவுடன் வந்து அவரைப் போன்று தங்களுக்கும் அழகிய முகம் வேண்டும் எனக் கேட்கின்றனர். இத்தகைய அறுவைச் சிகிச்சைசெய்ய 60 லட்சம் ரூபா முதல் 90 லட்சம் ரூபா (இலங்கை நாணயத்தில்) வரை செலவாகின்றது. அதைப் பற்றியெல்லாம் அவர்களுக்கு கவலை இல்லை. ட்ரம்ப் மகள் போன்று மாற வேண்டும் என ஆசைப்படுகின்றனர்.

ஒரு பெண் இவாங்கா போன்று மாற இந்த வருடத்தில் மட்டும் 13 தடவை சிகிச்சை செய்து இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியா - நேபாளம் எல்லையில் சட்டவிரோதமான ஆயுத உற்பத்தி

### 20 துப்பாக்கிகள் மீட்பு



லக்னோ,செப்.25

இந்தியா-நேபாளம் எல்லையில் உள்ள உத்தரப் பிரதேச மாநிலத்தின் சின்காகி பகுதியில் சட்ட விரோதமாகச் செயற்பட்ட ஆயுத தொழிற்சாலை கண்டுபிடிக்கப் பட்டு ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலம் சின் காகி பகுதியில் உள்ள மாகாதேவ் தண்டா கிராமத்தில் சட்ட விரோதமாக நாட்டுத் துப்பாக்கிகள் செய்யப்படுகின்றன எனப் பொலிஸாருக்குத் தகவல் வந்ததையடுத்து அந்தப் பகுதியைச் சேர்ந்த இஸ்ரார், புன்னு, முகமது ஷமி மற்றும் ரஃபிக் ஆகிய நான்கு பேரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

மேலும், அவர்களிடமிருந்து 20 துப்பாக்கிகள் மற்றும் அதைச் செய்வதற்கான உதிரிப் பாகங்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்தவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் மாநிலத்தின் பல மாவட்டங்களுக்கு சட்ட விரோதமாக ஆயுதம் கடத்துவதை அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

மேலும் மற்ற நாடுகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்பட்டனவா? என்பது தொடட்பாகப் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

## வட கொரியாவை மிரட்டிய அமெ. போர் விமானங்கள்





வடகொரியாவின் அணு ஆயுத திட்டம் தொடர்பாக, அமெரிக்காவும், வட கொரியாவும் சமீபகாலமாகச் சொற்போர் நடத்தி வருகின்றன.

அமெரிக்கா தன்னைத் தற்காத்துக் கொள்ளக்கூடிய கட்டாயம் ஏற்பட்டால், வட கொரியாவை முற்றிலும் அழித்துவிடும் என்று கடந்த செவ்வாய்க்கிழமை ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றியபோது ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், வடகொரிய பிரதிநிதியும் கடந்த சனிக்கிழமை ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றவிருக்கின்ற நிலையில் வட கொரியாவுக்கு நெருக்கமாக அமெரிக்கப் போர் விமானங்கள் பறந்திருக்கின்றன.

வடகொரியாவின் முரட்டுத்தனமான நடவடிக்கையை அமெரிக்கா எப்படி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்தப் போர் விமானங்கள் எடுத்துக் காட்டுகின்றன எனப் பென்டகன் கூறியுள்ளது.

அமெரிக்காவையும் அதன் கூட்டாளிகளையும் பாதுகாக்க எங்களது இராணுவ சக்தியை முழுமையாகப் பயன்படுத்தத் தயாராக இருக்கிறோம் என்றும் பென்டகன் தெரிவித்துள்ளது. (ப)











# யாழின் கில்லாடி காலிறுதி போட்டிகள் ஆரம்பமாகின

(கங்கா)

யாழின் கில்லாடி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று அரியாலை உதைபந்தாட்ட மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளன.

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், யாழின் கில்லாடி என்னும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று கடந்த 10 ஆம் திகதி முதல் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 32 உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் ஏ, பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நொக்கவுட் முறையில் நடைபெற்று வருகின்றன.

முதற்சுற்று மற்றும் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று முடிந்து 8 அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

குருநகர் பாடும்மீன், புங்குடுதீவு நசரேத், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மயிலங்காடு ஞானமுருகன், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், இளவாலை ஹென்றியரசர், ஊரெழு றோயல், மற்றும் இளவாலை சென்.லூட்ஸ் அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றன.

நேற்று இரவு 7 மணிக்கு நடைபெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதியது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு நடைபெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதவுள்ளது.

தொடர்ந்து 27 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணிக்கும் நடைபெறும், மூன்றாவது காலிறுதியாட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணியை எதிர்த்து இளவாலை ஹென்றிஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கும் நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது.





# மகாஜனக் கல்லூரி அணி மாவட்டச் சம்பியனாகியது



(கங்கா)

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் 18 வயது, பிரிவு 3 பாடசாலை அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியனாகியது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 18 வயதுப்பிரிவின், பிரிவு - 3 அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகிய அணிகள் பங்குபற்றத் தகுதியாக இருந்தன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி போட்டியில் இருந்து விலகியது. இதனால் மாவட்டத்தின் சம்பியனைத் தெரிவு செய்வதற்காக மகாஜனக் கல்லூரிக்கும், சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான போட்டி, மகாஜனக் கல்லூரி மைதானத்தில் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெற்றிருக்கவில்லை. தொடர்ந்து இடம் பெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் மகாஜனா அணி 4:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

# கிண்ணத்தைச் சுவீகரித்தது மல்லாகம் ஸ்ரீ முருகன் அணி!

(கங்கா)

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியாக நடத்திய 10 ஓவர்கள் கொண்ட யாழின் கில்லாடி மென்பந்தாட்ட துடுப்பாட்டப் போட்டியில் மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற மல்லாகம் ஸ்ரீ முருகன் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

மல்லாகம் அணி 10 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஈ.எஸ்.வரன் 23 ஓட்டங்களையும், சந்திரன் மகிலன் 17 ஓட்டங்களையும், ஜனுசன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொம்மாந்துறை அணி, 10 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 46 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 29 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



ஆட்டநாயகனாக மல்லாகம் அணியின் ஈ.எஸ்.வரன் (23 ஓட்டங்கள், 2 விக்கெட்டுகள்) பெற்றுக்கொண்டார்.

# பிரமோத்யவின் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த இலங்கை வீரர்கள் கோரிக்கை



கொழும்பு, செப்.25

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், முன்னாள் அணித் தேர்வாளருமான பிரமோத்ய விக்ரம சிங்கவினால் முன்வைக்கப்பட்ட இயற்கைக்கு மாறான மற்றும் மர்மமான போட்டி முறை பற்றிய அதிர்ச்சி தரும் குற்றச்சாட்டுகள் குறித்து உடனடியாக விசாரணை நடத்தும்படி 40 ஒப்பந்த வீரர்கள் உட்பட இலங்கை தேசிய அணி வீரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை அணித் தலைவர்களான தினேஷ் சந்திமல் மற்றும் உபுல் தரங்க உட்பட வீரர்கள் கையொப்பமிட்டு இலங்கை கிரிக்கெட் சபைக்கு (SLC) வழங்கிய மனுவில், பிரமோத்யவின் கூற்று பற்றி அவதானம் செலுத்தும்படி கோரப்பட்டுள்ளது.

பிரமோத்ய விக்ரமசிங்க தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த அறிவிப்பு அதிர்ச்சியூட்டுவதாகவும், புண்படுத்துவதாகவும் உள்ளது. அது பொதுமக்கள் எம்மீது ஒரு சந்தேகப் பார்வையை ஏற்படுத்துவதாக உள்ளது என்று இலங்கை தேசிய அணி வீரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இயற்கைக்கு மாறான மற்றும் மர்மமான போட்டி முறை பற்றி விக்ரம சிங்க சுமத்தும் ஒன்பது விடயங்கள் குறித்து வீரர்கள் அவதானத்தை வெளியிட்டுள்ளதுடன் இந்தக் குற்றச் சாட்டுகள் முற்றிலும் ஆதாரமற்றவை என்று நிராகரித்துமுள்ளனர்.

வெற்றி என்ற இறுதி இலக்குக்காக, தமது குடும்பத்தினருடன் செலவிடும் நேரத்தையும் தியாகம் செய்து, 200 மடங்கு அர்ப்பணிப்புடன், வீரர்கள் தேசியக் கொடியின் கீழ் தமது தாய் நாட்டுக்காக விளையாடுகின்றனர் என்று தேசிய அணி வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

அவதூறு கொண்ட இந்தக் கொடூரமான குற்றச்சாட்டால் தமது நற்பெயர்களுக்கு ஏற்பட்டிருக்கும் களங்கத்தை துடைக்க விக்ரமசிங்கவை அழைத்து உடன் விசாரணை நடத்த வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் சபையை வீரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், தான் சுமத்தும் குற்றச் சாட்டுகளை நிரூபிக்கும்படியும் இலங்கை கிரிக்கெட் தேசிய அணி வீரர்கள் பிரமோத்யவிற்கு சவால் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது



# காலிறுதிக்குள் சென்.லூட்ஸ்!

(கங்கா)

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், யாழின் சில்லாடி என்னும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று கடந்த 10 ஆம் திகதி முதல் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 32 உதைபந்தாட்ட அணிகள் பங்கு பற்றுகின்றன. அணிகள் ஏ, பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நொக்க வுட்முறையில்நடைபெற்று வருகின்றன.

முதற்சுற்று மற்றும் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று முடிந்துள்ளன. இறுதி இரண்டாம் சுற்று ஆட்டம் 23 ஆம் திகதி நடைபெற்றபோது, இளவாலை சென்.லூட்ஸ் அணியை



எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் அணி, ஒரு கோலைப் போட்டது. இரண்டாவது பாதியில் மேலும் ஒரு கோலைப் போட்ட சென். லூட்ஸ் அணி வெற்றியை உறுதி செய்தது.

இந்த வெற்றியுடன் சென்.லூட்ஸ் அணி காலிறுதிக்குள் நுழைந்தது.

# வடமாகாண தெரிவு அணி மூன்றாமிடம் பெற்றது



(கங்கா)

தேசிய விளையாட்டு விழாவின் உதைபந்தாட்ட தொடரில் வடமாகாணத் தெரிவு உதைபந்தாட்ட அணி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

43 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் தற்போது மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் ஓர்அங்கமாக மாகாண உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் வடமாகாண தெரிவு அணியும் பங்குபற்றியிருந்தது. வடமாகாணம் முதற்சுற்றில் வடமத்திய மாகாண தெரிவு அணியை வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதியில் மேல் மாகாண தெரிவு அணியுடன், மோதிய வடமாகாணம், போட்டி முடிவடைய சில நிமிடங்கள் இருக்கும் வரையிலும், 2:1 என்ற கோல்கள் கணக்கில் பலமாக முன்னிலையில் இருந்த போதும், இறுதிநேரத்தில் விடப்பட்ட தளர்வால் மேல்மாகாண அணி ஒரு கோலை அடித்து போட்டியை சமநிலைப்படுத்தியது. தொடர்ந்து நடைபெற்ற சமநிலைத் தவிர்ப்பு உதையில், மேல் மாகாண அணி 3:2 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. தொடர்ந்து 3 ஆம் இடத்துக்கான ஆட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாத்தறையில் நடைபெற்றது. இதில் வடமாகாண தெரிவு அணியை எதிர்த்து தென் மாகாண தெரிவு அணி மோதியது. போட்டி நேரம் வரையில் இரண்டு அணிகளும் 2:2 என்ற கோல்கள் கணக்கில் இருந்தது. பிறேம்குமார், பியுசல் ஆகியோர்தலா ஒவ்வொரு கோல்களை வடக்கு அணி சார்பாகப் பெற்றுக்கொடுத்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் வடமாகாண தெரிவு அணி, 5:4 என்ற கோல்கள் கணக்கில் வென்று, மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

வடமாகாண தெரிவு அணி 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 2 ஆம் இடத்தையும், 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டியில் 3 ஆம் இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வருட வடமாகாண தெரிவு அணியின்தலைவராக வதிரி டயமன்ஸ் அணியின் நட்சத்திரவீரர் பிறேம்குமார் (பீமா) இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைக்கால அறிக்கை தொடர்பில் கேள்வி – பதில் வடிவத்தில் அவர் வழங்கிய செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனக்குப் பொருத்தப்பட்ட இதயத்துக்கான 'பேஸ் மேக்கர்' கருவியின் சீராக்கத்துக்காக நேற்று யாழ். வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்படவிருக்கையில் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

அந்தக் கேள்வி – பதில் குறிப்பின் முழு விவரம் வருமாறு:-

கேள்வி:- உத்தேச அரசமைப்புத் திருத்தத்துக்கான இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ள நிலையில் தமிழர் தரப்பிலிருந்து பரவலான அதிருப்தியும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது தொடர்பில் தங்களது நிலைப்பாடு என்ன?

பதில் :- முழுமையாக அந்த ஆவணத்தைப் பரிசீலிக்க எனக்கு நேரம் போதவில்லை. மருத்துவமனைக்குச் செல்லும் தறுவாயில் எனது மேலெழுந்த கருத்துக்களை வெளியிட விரும்புகின்றேன். எனது அவதானம் இதுவே.

**நோய்க் காரணியை அறியாது மருத்துவம்**

ஒருவர் நோயுற்றிருந்தால் அவரின் அந்த நோய் என்ன என்று முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அதன்பின் அந்த நோய்க்கு எவ்வாறான சிகிச்சை அளிக்க வேண்டும் என்று ஆராய வேண்டும். அந்த ஆராய்வின் முடிவில் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு நோயைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

நாம் இப்போது எமது நோயைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதே எனது கருத்து. நோயைப் புரிந்து கொள்ளாது ஒவ்வொருவரும் 'பனடோல்' கொடுப்போம், 'கசாயம்' கொடுப்போம், 'பனடீன்' கொடுப்போம், 'எண்ணை தேய்ப்போம்' என்று கொண்டிருக்கின்றோம். நோயைப் புரிந்து கொள்ளாது மருந்துகளைப் பற்றிய சர்ச்சையில் ஈடுபட்டுள்ளோம். நோயைப் புரிந்துகொள்ள நோயின் சரித்திரம் மிக அவசியம். எவ்வாறான பின்புலம் இன்றைய நோயை ஏற்படுத்தியது என்று அறிந்தால்தான் உரிய சிகிச்சையைப் பரிந்துரைக்கலாம். நோயைப் புரிந்து கொள்ளாது சிகிச்சையில் நாம் ஈடுபட் டுள்ளோம் என்பதே எனது அவதானம்.

இடைக்கால அறிக்கை நோயை அறிந்ததாகவோ, தீர்க்கப் போதுமானதாகவோ தென்படவில்லை. நோயை அறியாத சிகிச்சை தோல்வியில் முடியும்.

**ஏமாற்றம், அதிருப்தி!**

இடைக்கால அறிக்கை தமிழர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தும் என்பது திண்ணம். சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதாகவே அந்த அறிக்கை உள்ளது. எதனைப் புறக்கணித்து நாம் எழுபது வருடங்களுக்கு மேலாகப் போராடி வந்தோமோ அதனை வலியுறுத்துவதாகவே அறிக்கை அமைந்துள்ளது. அதனால் தான் நான் கூறினேன் நோயை அறியாமல் மருந்து பற்றி சம்பாஷணைகள் நடந்துள்ளன. என்று. நோய் என்று நான் குறிப்பிடுவது எமக்கு இனப் பிரச்சினை ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்தவையே. சிங்களத் தலைவர்கள் அரசியல் அதிகாரத்தைத் தம்வசம் எடுத்துக் கொண்டுதாம் செய்ததே சரியென்ற அடிப்படையில் இது வரை காலமும் நடந்து கொண்டமையே எமது அரசியல் நோய்க்கு மூல காரணம்.

இந்தத் தலைவர்களின் இது வரையிலான செயற்பாடும் நோக்கும் கண்டிக்கப்பட்டு, அதற்கான மாற்றத்தை நாம் முன்வைக்க முன்வரவேண்டும். அப்போதுதான் நோய்க்கு நாம் பரிகாரம் தேடலாம்.

**அருவருப்புத் தரும் நடவடிக்கை**

ஒற்றை ஆட்சியை நிராகரித்து தமக்குரிய அரசியல் தீர்வாக சமஷ்டிக் கோரிக்கையைத் தமிழர்கள் முன்வைத்துள்ள நிலையில், தொடர்ந்தும் ஒற்றையாட்சி முறைமையைத் தக்கவைக்கும் பொருட்டு வார்த்தைப் பிரயோகங்களில் ஏமாற்ற முற்பட்டுள்ளமை அருவருப்பை ஏற்படுத்துகின்றது. ஒரு நாட்டினுடைய ஆட்சிக் கட்டமைப்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு பொருத்தமான வார்த்தையைப் பயன்படுத்தாது 'ஏகிய ரட்' என்ற சிங்களச் சொற்பதத்தைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். 'எக்சத்' என்ற பதத்தைப் பாவிக்காது 'ஏகியரட்' என்று கூறியமை அறிக்கை ஆக்கியோரின் கபடத்தனத்தை வெளிக்காட்டுகின்றது. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு, இணைந்த வடக்கு – கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் அதிகாரம் பகிரப்படவேண்டும் என்கின்ற தமிழ் மக்களின் கோரிக்கை இந்த இடைக்கால அறிக்கையில் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளதாகவே கருதமுடியும்.

**கூட்டமைப்பு வழங்கிய பின்னிணைப்பு**

கேள்வி:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்தவாறு வடக்கு – கிழக்கு இணைப்புப் பற்றியும் ஐக்கிய இலங்கை, மாகாணங்களின் ஒன்றிணைப்புப் பற்றியும் பின்னிணைப்பில் வலியுறுத்தியுள்ளதே, அது பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- அறிக்கையின் ஆங்கிலப் பிரதியைப் பார்த்தீர்களானால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஏறத்தாழ 70 வருடங்களாகத் தமது உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் எமது இனத்தின் கோரிக்கைகளை வெறும் ஒன்றரை கால் பக்கத்துக்குள் அடக்கியிருக்கின்றது என்பது தெரிய வருகின்றது. வேறு அறிக்கைகளைக் குறிப்பிட்டுள்ளதே தவிர திடமாகத் தமக்கு வேண்டியவற்றைக் கூறத் தவறியுள்ளது. வடமாகாண சபையும் தமிழ் மக்கள் பேரவையும் போதுமான விவரங்களுடன் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தன.

மத்திய அரசுக்கும் மாநிலத்துக்கும் இடையில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் எனக் கூறப்படுகின்றதே தவிர என்னென்ன அதிகாரங்கள் மாநிலத்துக்கு ஒதுக்கப்படவேண்டும் என்பது பரிந்துரை செய்யப்படவில்லை. ஒட்டுமொத்தத்தில் இந்த இடைக்கால அறிக்கை தமிழரின் இனப் பிரச்சினை தொடர்பான பயணத்தைப் பின்னோக்கி நகர்த்தியுள்ளதாகவே கருதலாம்.

**ஆதரவு தர முடியுமா?**

கேள்வி :- இவ் இடைக்கால அறிக்கைக்கு நீங்கள் ஆதரவு வழங்குவீர்களா?

பதில்:- நோய்க்கு மருந்து கொடுக்காவிட்டால் நோய் தீராது. தொடரப் போகும் நோய்க்கு ஆதரவு வழங்கச் சொல்கிறீர்களா? அரை குறைத் தீர்வு ஒருபோதும் நோய்க்கு மருந்தாகாது. தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்தையே இந்த இடைக்கால அறிக்கை எமக்கு நல்கியுள்ளது. – என்றார். (உ)

## அதிகாரப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ராஜித ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். அதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவரிடம் கேட்கப்பட்ட வினா ஒன்று பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரி வித்திருப்பவை வருமாறு:-

மிக மோசமான காலப் பகுதியிலும் நான் வடக்கே வந்திருக்கின்றேன். இங்கு கிளர்ச்சிக்காரத் தலைவர்களுடனும் பேசியுள்ளேன். அவர்களைச் சந்தித்துள்ளேன். இப்போது சுதந்திரமாக இருக்கின்றது. ஆனாலும் இங்குள்ள பல பிரச்சினைகளை நாம் தீர்த்து வைக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக வடபகுதி மக்களது நிலங்கள் மீளளிப்பு, காணாமல் போனோர் விடயங்கள், அரசியல் கைதிகள் தொடர்பான பிரச்சினைகள் போன்றவை தீரக்கப்பட வேண்டி உள்ளன. இவ்வாறான நிலையில் தற்போது சுகாதார சேவைகளை மிகச் சிறப்பாகக் கட்டியெழுப்பி வருகின்றோம். எமது நோக்கம் 2020ஆம் ஆண்டாகும் போது சிறப்பான சுகாதார சேவையை வழங்க வேண்டும் என்பதே யாகும். – எனத் தெரிவித்தார்.

இதன்பின்னர் அமைச்சரிடம் கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட புதிய அரசமைப்பிற்கான இடைக் கால அறிக்கை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பியிருந்தார். அதற்கு அவர் பதிலளிக்கையில் –

சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக் கால அறிக்கை தொடர்பாக அரசியல் கட்சிகள் கலந்துரையாடி ஓர் இறுதி முடிவுக்கு வருவார்கள். அக் கட்சிகளுடைய கருத்துக்களை இரண்டு வாரங்களுக்குள் பெற்று அரசமைப்பை இறுதியாக்கலாம் என எதிர்பார்க்கின்றோம்.

சிறிலங்கா சுதந்திர கட்சி கூட அதிகார பகிர்வு முன்மொழிவுகளுக்கு உடன்பட்டிருக்கின்றது. ஒரே ஒரு விடயத்தில் மாத்திரமே அக்கட்சி ஏனைய கட்சிகளிலிருந்து வேறுபட்டுள்ளது. அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை பற்றிய விடயத்திலேதான் அந்த முரணிலை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டுமா, இல்லையா அல்லது அது இருந்தால் அது என்ன வடிவத்தில் இருக்க வேண்டும், ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டுமா அல்லது நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட வேண்டுமா அல்லது ஜனாதிபதி முறையை நீக்க வேண்டுமா என்பதே இப்போது முடிவெடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஆனாலும் சிறிலங்கா சுதந்திர கட்சி அதிகார பகிர்வு முன்மொழிவுகளை ஆதரிக்கின்றமை எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

எனவே பிரதான இரண்டு கட்சிகளுமே அதிகாரப் பகிர்வு விடயத்தில் முதன் முதலாக உடன்பட்டிருக்கின்றமை புதிய அரசமைப்பு முயற்சிகளில் நாம் பெற்றுக்கொண்டுள்ள முதலாவது வெற்றியாகும். – எனத் தெரிவித்தார். (உ)

# வடமராட்சி கடல் நீரேரியில் மழை நீர் சேகரிப்புத் திட்டம்

யாழ். குடாநாட்டுக்கான குடிதண்ணீர் தேவையை நிறைவேற்றும் வகையில், மழை நீர் சேகரிப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி, குடாநாட்டில் பெய்யும் மழையில் 20 சதவீதத்தை வடமராட்சியில் உள்ள 78 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணம் கொண்ட நீரேரியில் சேகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு வட மாகாண சபை முதலமைச்சரும், அமைச்சரவையினரும் அனுமதி வழங்கியுள்ளனர்.

விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளரும் விவசாயத் திணைக்கள முன்னாள் இயக்குனருமான பொறியியலாளர் ஏ.டி. எஸ்.குணவர்தன இத்திட்டத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வட மாகாண அபிவிருத்திச் சபை மற்றும் பிரதமரால் அமைக்கப்பட்ட கொள்கை அபிவிருத்தி அலுவலகம் ஆகியன இத்திட்டத்தை மேற்பார்வை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் சொல்வது ஒன்று எனவும் செய்வது வேறொன்று எனவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாரஹேன்பிட்டியவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (உ)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் 85 அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், கடைசி அமர்வு இன்று இடம் பெறவுள்ளது.

மாகாண சபையின் ஆயுட் காலம் எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் நிறைவடைவதையடுத்து, அதன் நிர்வாகம் ஆளுநரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவுள்ளது.

## ரணிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரியான பாதையில் கொண்டு செல்கின்றோம். இந்தப் பாதையை மீண்டும் மோசமான பக்கம் திருப்ப முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (உ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டமைப் பின் தலைவருமான இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் எம்.பிக்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன் கட்சியின் செயலாளரும் கிழக்கு மாகாண சபை அமைச்சருமான துரைராஜசிங்கம் ஆகியோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக் கால அறிக்கையின் சாதக, பாதகங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது என்த் தெரிவிக்கப்பட்டது.

ஜனவரியில் நடைபெறக்கூடிய உள்ளூராட்சித் தேர்தலை எவ்வாறு அணுகுவது என்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

எனினும், இவ்விடயங்கள் குறித்து மீண்டும் ஒருதடவை மத்திய குழுவைக் கூட்டி ஆராய்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூட்டத்தின் பின்னர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். (உ)

## மண்டைதீவில் காணாமற் போனோர் நினைவு தினம்

யாழ்கோட்டையைமீட்பதுஎன்ற பெயரில் 1990 ஆம் ஆண்டு மண்டைதீவு பகுதியில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது. மண்டைதீவு அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதிகளைச் சேர்ந்த 92 பேர் கைது செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு, காணாமலாக்கப்பட்டமை இங்கு நினைவு கூரப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கேப்பாப்பிலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமில் இருந்து வெளியேறும் இராணுவம் 64 பேருக்கு சொந்தமான 111 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

முகாம்களில் இருந்து படையினர் முற்றுமுழுதாக வெளியேறிய பின்னர் காணிகளை மாவட்ட செயலகம் உத்தியோக பூர்வமாகக் கையேற்கும் என்றும் மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தம்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்கு மத்தியில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் தியாகி திலீபனின் உருவப் படத்திற்கு முதலாவது மாலையை சம்பந்தன் அணிவித்து முதல் சுடரை ஏற்றி வைத்தார். கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அவரைத் தொடர்ந்தார். அதன் பின்னர் ஏனைய கட்சி உறுப்பினர்கள் மலரஞ்சலி செலுத்திச் சுடரேற்றினர்.

தொடர்ந்து திலீபனின் தியாகத்தை நினைவில் நிறுத்தி சம்பந்தன் அஞ்சலி உரையாற்றினார்.

"நாட்டில் தமிழர்களுக்கு எதிரான அநீதி தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. அதனை உலகறியச் செய்வதற்காகப் பல போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. காந்தீய நெறிப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. இராஜதந்திரப் போராட்டங்களும் முன்னெடுக்கப் படுகின்றன.

1987 இல் தமிழ் மக்களின் கருத்தை ஒட்டு மொத்தமாகப் பிரதிபலிக்கும் பாணியில் தனி ஒருவனாக காந்தீய மார்க்கத்தில் – அற வழியில் – போராடி தன் உயிரையே இந்த மக்களுக்காக ஈந்தான் தம்பி திலீபன்.

அவரின் போராட்டமும் உறுதியும் வித்தியாசமானவை.

அவர் தன்னுயிரைத் தியாகம் செய்த இந்த முப்பதாவது ஆண்டில் இங்கு நாம் தம்பி திலீபனை நினைவுகொண்டு அஞ்சலிப்பது மிகப் பொருத்தமானதாகும்.

– இவ்வாறு இரா. சம்பந்தன் தமது உரையில் குறிப்பிட்டார். (உ)

# அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணை அ'புரம் நீதிமன்றத்துக்குத் திடீர் மாற்றம்!

கொழும்பு, செப். 25

தமிழ் அரசியல் கைதிகள் மூன்றுபேரின் வழக்கு விசாரணையை வவுனியா மேல் நீதிமன்றத்தில் இருந்து அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு சட்டமா அதிபர் திணைக்களம் கடிதம் அனுப்பியுள்ளது.

இன்று முதல் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற விருந்த நிலையில் வழக்கு விசாரணையை அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு சட்டமா அதிபர்திணைக்களம் வவுனியா நீதிபதிக்கு திடீரென கடிதம் அனுப்பியுள்ளது.

செங்கன் எனப்படும் இராசதுரை திருவரன், மதியழகன் சுலக்ஸன், கணேசன் தர்சன் ஆகியோரின் வழக்கு விசாரணையே அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

தமது வழக்கு விசாரணையை அனுராதபுரத்திற்கு இடமாற்ற வேண்டாம் எனக் கோரி இந்த மூன்று அரசியல் கைதிகளும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருந்தனர்.

வழக்கு விசாரணை வவுனியாவில் இருந்து வேறு எங்கும் இடமாற்றப்படாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு கடிதத்தின் மூலம் உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில் வழக்கு அனுராதபுரத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இன்று வவுனியா மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமாகவிருந்த தொடர் விசாரணைக்கு 70 சாட்சியங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

சில சாட்சியங்களுக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வழக்கை அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றும் நோக்கில் பல்வேறு அச்சுறுத்தல்களை பயங்கரவாதத் தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் எனக் கைதிகளின் உறவினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு இந்த மூன்று கைதிகளுக்கும் எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்தஏட்டுஆண்டுகளுக்கு முன்னர் இந்த மூன்றுபேரும் வவுனியாவில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## கிளிநொச்சி நகரில் ஆணின் சடலம் மீட்பு!



கிளிநொச்சி, செப். 25

கிளிநொச்சி நகரில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை குறித்த பகுதியில் சடலம் ஒன்று காணப்படுவது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலிற்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நபர் உயிரிழந்தமை தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த நபர் தொடர்பில் அடையாளம் காணும் நடவடிக்கைகள் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். இவரது தகவல் தெரிந்தவர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தகவல் வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றனர்.

## புதிய அரசமைப்பை தந்திரமாக நிறைவேற்ற அரசு முயற்சியில்!

கொழும்பு, செப். 25

புதிய அரசமைப்புச் சட்டத்தை தந்திரமான முறையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தில் நிறை வேற்ற அரசு முயற்சித்து வருகிறது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற அரசு இப்படியான செயற்பாட்டை கையாண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

புதிய அரசமைப்புச்சட்டம் தேவையில்லை என்ற தமது கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



விமல் வீரவன்ச கூறுகிறார்

இதனிடையே, புதிய அரசமைப்புச்சட்டம் உருவாக்கப்படும் போது சர்வஜன வாக்கெடுப்புக்கு ஏதுவாக அமையும்திருத்தங்களை செய்யக் கூடாது என்ற கொள்கையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருந்து வருகிறது என அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான அமைச்சர் ஜோன் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

## சிறுமி துஷ்பிரயோகம்; இராணுவ வீரர் கைது!

கொழும்பு, செப். 25

வனாத்தவில்லு பகுதியில், பதினைந்து வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மிகிந்தலை இராணுவ முகாமில் பணியாற்றும் இந்த 40 வயது இராணுவ வீரர், விடுமுறைக்காக கடந்த 18 ஆம் திகதி வனாத்தவில்லுவுக்கு வந்திருந்தார்.

அப்போது, அவரது அயல் வீட்டுச் சிறுமியொருவரையே துஷ்பிரயோகம் செய்துள்ளார். இது குறித்து கிடைத்த தகவலின் பேரிலேயே அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட வீரரிடம் பொலிஸார் விசாரணை நடத்திவரும் அதேவேளை, பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சிறுமி மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட விருக்கிறார் என்றும்பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

## வைத்தியருக்கான 20 வீடுகள் கொண்ட விடுதி நுவரெலியாவில் ராஜிதவால் திறந்து வைப்பு

கொழும்பு , செப். 25

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் புதிதாக வைத்தியர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 20 வீடுகளைக் கொண்ட விடுதியைச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன், மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் எம்.ரமேஸ்வரன், மத்திய மாகாணசபை உறுப்பினர் ஆர்.இராஜாராம் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை, கல்வி இராஜாங்க அமைச்சரின் கோரிக்கைக்கமைய, நெதர்லாந்து நாட்டின் உதவியுடன் 37 மில்லியன் யூரோ செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் வைத்தியசாலையின் வேலைத்திட்டங்களையும் சுகாதார அமைச்சர் பார்வையிட்டுள்ளார்.



# தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் தியாகி திலீபனுக்கு நினைவேந்தல்



அம்பாறை – கல்முனையில் நேற்று இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய கூட்டத்தின் இடையே தியாக தீபம் திலீபன் நினைவஞ்சலியும் இடம்பெற்றது. இங்கு தழிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா மற்றும் உறுப்பினர் செல்வராசா ஆகியோர் சுடரேற்றி அஞ்சலி செலுத்துகின்றமையையும் நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் அமர்ந்திருக்கின்ற மையையும் படங்களில் காணலாம்.

# கூட்டமைப்பு ஏற்பாட்டில் நாளை நல்லூரில் திலீபன் நினைவேந்தல்

தியாகத் தீபம் திலீப னின் நினைவேந்தல் நிகழ் வுகள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஏற்பாட்டில் நாளை நல்லூரில் நடை பெற உள்ளன.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கத்தின் தலைமை யில், நல்லூரிலுள்ள திலீப னின் நினைவுத் தூபியில் நாளை 26ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண முதல்வர், அமைச் சர்கள், உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதி கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த உள்ளனர்.

இந்நிகழ்வில் பொது மக்கள் அனைவரும் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டு தமிழரின் விடிவிற் காய் தன்னையே ஆகுதி யாக்கிக் கொண்ட திலீப னுக்கு அஞ்சலி செலுத்து மாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (உ)

# பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சிக்கிய 152 காதல் ஜோடிகள்!

## அ'புரத்தில் அதிரடி 'ஒப்பிரேஷன்'

அநுராதபுரம், செப்.25

அநுராதபுரம் பொலிஸ் தலைமையகத்தின் பொலிஸ் பிரிவினர் நேற்று நகரில் மேற்கொண்ட அதிரடி சுற்றிவளைப்பில் 152 காதல் ஜோடிகள் கைதுசெய்யப்பட்டன எனக் கூறப்பட்டது.

மேலதிக வகுப்பிற்குச் செல்வதாகக் கூறிவிட்டே அனேகமான காதல் ஜோடி கள் வீட்டை விட்டு வந்துள் ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அநுராதபுரம் நகரில் உள்ள 'ரிவர் பார்க்', 'நேச்சர் பார்க்' முதலிய பூங் காக்களில் உலவுகின்றனர் எனத் தொடர்ந்து பொலி ஸாருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையை அடுத்தே இந்தச் சுற்றி வளைப்பு இடம்பெற்றுள் ளது.

சில காதல் ஜோடிகள் அநாகரீகமான முறையில் நடந்து கொண்டுள்ளன எனவும் தகவல் கிடைத்த தாகவும் பொலிஸ் குறிப்பிட் டுள்ளது.

இளம்காதலர்கள் அனை வரையும் பஸ்களில் ஏற்றிச் சென்ற பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் வைத்து அவர்களை விசா ரித்தனர்.

கைது செய்யப்பட்ட காதல் ஜோடிகள் கடும் எச் சரிக்கைக்குக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டன எனப் பொலிஸ் வட்டாரங் கள் மேலும் தெரிவித்தன.

இந்த விசேட பொலிஸ் நடவடிக்கையில் 45 பொலி ஸார் ஈடுபடுத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட் டது. (உ)




மறைந்த ஊடகவியலாளர் அமரர் அஸ்வின் சுதர்சனின் நினைவாக 'கோடுக ளால் பேசியவன்' எனும் நூல் வெளியீடு நேற்று மாலை நாச்சிமார் கோவிலடியிலுள்ள ராஜா கிறீம்கவுஸின் ஹம்சியா மண்டபத்தில இடம்பெற்றது. அஸ்வின் குடும்பத்தி னர் அஞ்சலி செலுத்திய பின் நூலை வெளியிட்டு வைத்தனர். அங்கு எடுக்கப்பட்ட பதிவுகள் சில.



தியாக தீபம் திலீபனின் முப்பதாவது ஆண்டு நினைவை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியில் இரத்ததானம் வழங்கப்பட்டது. யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவனான திலீபன் நினைவு கூரப்பட்டு அவருக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற இந் நிகழ்வில் கல்லூரி மாணவர்களும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டு அஞ்சலிகளைச் செலுத்தி இரத்த தானம் வழங்கினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.